www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

21 MARCH 2023 - TUESDAY | Pages - 10 | E Paper - # 032 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

# இலங்கைக்கு உதவ சர்வதேச நாணய நிதியம் அங்கீகாரம்

**ஜனாதிபதி ரணில்**

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீட்டிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான ஏற்பாட்டிற்கு சர்வதேச நாணய நிதிய செயற்குழுவின் அனுமதியை இலங்கை பெற்றது.

02 »»



# வக்ப் சொத்துக்களை பாதுகாக்க ஒன்றிணைந்து செயற்பட முடிவு!

## முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டத்தில் தீர்மானம்!


(அப்றா அன்சார்)

வக்ப் சொத்துக்கள் மோசடி செய்வதை தவிர்ப்பதற்கும், வக்ப் சொத்துக்களின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்குமாக முஸ்லிம் இயக்கங்கள் கூட்டாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

நேற்று (20) கொழும்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற முஸ்லிம் இயக்கங்கள் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கபூரியா அரபுக் கல்லூரி, கல்லெலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, மாகோல அநாதை இல்லம், மல்வானை அநாதை இல்லம் உட்பட மூதாதையர்களால் வக்பு

02 »»



# டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி 180 ரூபாவாக குறையும்

ஜப்பான், சிங்கப்பூர், ஜெர்மனி அல்லது கொரியா போன்ற நாடுகளைப் போல, ஆண்டின் இறுதியில் கையிருப்பு இருக்கும். சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு

02 »»

# இம்ரான்கான் மீது அடுக்கடுக்கான வழக்குகள்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது பரிசுப்பொருள் மோசடி வழக்கு தொடரப்பட்டுள்ளது. அத்துடன் பெண் நீதிபதியை மிரட்டியதாக மற்றொரு வழக்கும் பதிவாகியுள்ளது.

இந்த வழக்குகளில் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், இஸ்லாமாபாத் கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் நடந்து வரும் பரிசுப்பொருள்

02 »»



# இனியும் சோரம் போனால் இருப்பு கேள்விக்குறியாகும்

**றிஷாத் பதியுதீன்**



கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளை தொடர்ந்தும் விட்டுக்கொண்டு பொய்யான வாக்குறுதிகளுக்கும், ஏமாற்று வேலைகளுக்கும் இனியும் சோரம் போனால் நமது எதிர்காலம் கேள்விக்குறியாகும். எமது வாக்குகளினால் நாம் தெரிவுசெய்யும் நமது பிரதிநிதிகள் எமது பிரச்சினைகள், தேவைப்பாடுகள் தொடர்பில் நன்றாக தெரிந்தவர்களாகவும் எதிர்கால சந்ததியினருக்கு தேவையான திட்டங்களை

02 »»

# ஆப்கானில் மூடப்படும் ஊடக நிறுவனங்கள்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

02 »»

# புதன் மாலை ரமழான் பிறை பார்க்க வேண்டுகோள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1444 புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை பார்ப்பதற்கான மாநாடு எதிர்வரும் புதன்கிழமை 22ஆம் திகதி கொழும்பு பெரிய பள்ளிவாசலின் கேட்போர் கூடத்தில் இடம்பெற இருக்கின்றது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெற இருக்கும் பிறை பார்க்கும் மாநாட்டில்

02 »»



# ஆகஸ்ட் மாதத்துக்கு முன் குட்டித் தேர்தல் வேண்டும்

**தெரிவிக்கும் நாமல் தரப்பு**

தமது தரப்புக்கு விரைவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தம் தரப்பினர் உடனடியாக எதிர்கட்சித் தரப்புக்கு மாற வேண்டும் என்று நாமல் ராஜபக்ச தரப்பினர் கருதுவதாகத்

02 »»

# அச்ச உணர்வுகளை அகற்றி முன்னோக்கி பயணிக்க வேண்டும்

**இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்**



இன்று இங்கு வந்திருக்கின்றவர்கள் 35 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களில் உள்ளங்களில் இன்று குடியிருப்பது அச்சம் நிறைந்த ஒரு வகையான சூழல். அதனை அகற்ற வேண்டும். அச்சமின்றி பேசுங்கள், செயல்படுங்கள், இலங்கை முஸ்லிம்களுக்கு தனித்துவமான அடையாளம் உண்டு. அதை

10 »»

# ஆபத்தான அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்த சமூகத்தின் புரட்சி

**ரவூப் ஹக்கீம்**



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இந்த நாட்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகத்திற்கு செய்து மறைக்கப்பட்ட பெரும் பங்களிப்பை ஆதாரபூர்வமாக வெளிக் கொண்டு வந்த ஒரு நூலாக இது விளங்கின்றது என பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

கலாநிதி றவுப் ஸெயின் தொகுத்த நினைவுக்கெட்டிய காலம் முதல் சுதந்திரம் வரையான

10 »»

## ஆப்கானில்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக பெண்களுக்கு எதிராக தலிபான்கள் கொண்டு வந்த கட்டுப்பாடுகளுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில்இ ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக்கு பிறகு 53 சதவீத பத்திரிகையாளர்கள் வேலை இழந்துள்ளதாக அந்நாட்டின் பத்திரிகையாளர்கள் சங்கம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் 50 சதவீத ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்தாண்டில் பத்திரிகையாளர்களுக்கு எதிராக 200 வழக்குகள் பதிவானதாக ஐ.நா. அறிக்கை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புதன்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு உறுப்பினர்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் அகில இலங்கை ஜம்யியதுல் உலமா சபையின் பிரதிநிதிகள் வளிமண்டல திணைக்கள அதிகாரிகள் ஏனைய பள்ளிவாசல்கள் தரீக்காக்கள் ஸாவியாக்களின் நம்பிக்கையாளர்கள் மேமன் சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

# ஆசிரியர்களின் இடமாற்றக் கடிதங்கள் இன்று அனுப்பி வைக்கப்படும்



ஆரம்ப ஆசிரியர்களின் இடமாற்றக் கடிதங்கள் இன்று (21) தபாலில் அனுப்பி வைக்கப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர், பிள்ளைகளின் கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெற்றால் மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக குறிப்பிட்டார்.

கடந்த மூன்று வருடங்களில் 8,893 ஆசிரியர் இடமாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## இலங்கைக்கு..

( முன்பக்கத் தொடர்ச்சி...)

நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கையின் வேலைத் திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு அங்கீகரித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான நிதியுதவியை இலங்கை பெற இத்திட்டம் உதவும்.

அரசாங்கத்தின் பல் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், கடன் நிலைத்தன்மையை அடையவும் அரசாங்கம் முயற்சித்து வரும் இலங்கைக்கு இது ஒரு வரலாற்று மைல்கல்லாக அமைகிறது. இந்த மாத தொடக்கத்தில், சர்வதேச நாணய நிதியத்திற்கு அமைவாக இலங்கைக்கு பெரிஸ் கழகம், சீனா, இந்தியா உள்ளிட்ட அதன் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் நிதி உத்தரவாதம் கிடைத்தது. சர்வதேச நாணய நிதியத்திற்கு செயற்குழுவைக் கூட்டி இலங்கையின் கடனுக்கான கோரிக்கையை பரிசீலிக்கும் வகையில் இந்த அனுமதி கிடைத்தது. முன்னெப்போதும் இல்லாத சவால்களில் இருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கும், அனைத்து பங்குதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான ஏற்பாடுகள் இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட அறிவிப்பு:

“இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களில் எமது பொருளாதார எதிர்காலத்திற்கு இதனை விட மிகவும் நெருக்கடியான காலகட்டம் இருந்ததில்லை. எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான மற்றும் சாதகமான செயற்பாடுகளைத் தொடர்ந்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல் தரப்பு அமைப்புகளிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்கு பெறும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவினால் எமது திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ஆரம்பத்திலிருந்தே, நிதி நிறுவனங்களுடனும் எங்கள் கடன் வழங்குபவர்களுடனும் நாங்கள் நடத்திய அனைத்து பேச்சுவார்த்தைகளும் முழு வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன. தூர நோக்கான பொருளாதாரக் கொள்கை மற்றும் எமது இலட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மூலம் பொருளாதாரம் நீண்ட கால மீட்சியை எதிர்பார்க்கும். இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

“கடந்த ஜூலை மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, நிலையான கடன் நிலையை அடைவதே எனது முன்னுரிமையாக இருந்தது. அதற்காக சில கடினமான முடிவுகளை எடுத்தோம். ஆனால், நமது சமூக பாதுகாப்பு வலையமைப்பை விரிவுபடுத்தவும், பாதிக்கப்படக்கூடிய தரப்பினர்களை பாதுகாக்கவும், ஊழலை முற்றாக ஒழிக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய, சர்வதேச அளவில் கவர்ச்சிகரமான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை உறுதி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். நமது நாட்டிற்கான இந்த நோக்கை அடைவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் மிகவும் முக்கியமானது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். எங்களின் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் நாங்கள் தொடர்ந்து தொடர்புபட்டிருக்கிறோம். மேலும் எங்கள் பணி முன்னோக்கிச் செல்லும் சூழலில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் எமது கடன் வழங்குநர்களை ஊக்குவிக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கும் இன்றியமையாததாக இருக்கும். மேலும் முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் திறமைகளுக்கு இலங்கை ஒரு ஈர்ப்புள்ள நாடு என்பதை மீண்டும் நிரூபிக்கும்.

## வக்ப்..

( முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட சொத்துக்களில் இடம்பெறும் மோசடிகளை தவிர்ப்பதற்காக இந்த முஸ்லிம் இயக்கங்கள் கூட்டாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளனர். அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை , ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா ஃபோரம் , தேசிய சூராஹ் கவுன்சில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனம் ,அல் முஸ்லிமாத்

உட்பட அமைப்புகள் பல நேற்றைய கூட்டத்தில் கூடி இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்கள்.

முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கூட்டம் ஜனாதிபதி சட்டத்தரணி பாஈஸ் முஸ்தபாவின் தலைமையில் நடைபெற்றது. அண்மைக்காலமாக பல வக்ப் சொத்துக்கள் சூரையாடப்படுவது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.இவற்றை பாதுகாப்பதற்காக சட்டரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் , பள்ளிவாசல்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் பல விடயங்கள் இங்கு ஆராயப்பட்டது.முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கும் தேவைபட்டால் அரசாங்கத்தை தொடர்பு கொண்டு அரசாங்க ஆதரவை பெறுவதற்கும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வக்ப் சொத்துகள் பல இடங்களில் சுரண்டப்படுவது குறித்து பெரும் கவலை தெரிவிக்கப்பட்டது. மஹரகம கபூரியாவுடைய நிலைமை பற்றி இங்கு விசேடமாக ஆராயப்பட்டது. தற்போது கல்லூரியின் நிலைமை குறித்து இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னால் மேல்மாகாண ஆளுனர் அசாத் சாலி விளக்கமளித்தார்.

மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. இந்த விடயங்களில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு செயற்படாவிடின் எதிர்காலத்தில் வக்ப் சொத்துக்களின் நோக்கங்கள் நிறைவேறாமல் சந்தர்ப்பவாதிகளால் அவை பறிமுதல் செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜம்இயத்துல் உலமா சார்பில் ஜாவித் மசூர், முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம் அமீன், உப தலைவர் ஹில்மி அஹ்மட், செயலாளர் எம்.டி.எம் ரிஸ்வி, அல் முஸ்லிமாத் தலைவர் டாக்டர் மரீனா ரிபாய், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை தலைவர் பர்ஸான், முன்னால் தலைவர் சஹீத் எம் றிஸ்மி, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் உப தலைவர் இஷ்ராம் நவாஸ், முன்னாள் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்கள பணிப்பாளர் ஏ.பீ.எம் அஷ்ரப்,முஸ்லிம் பெண்கள் அமைப்பின் சார்பில் திருமதி அம்பேரிய ஹனீபா ,கலாச்சார நிறுவனத்தின் தலைவர் உமர் காமில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சார்பில் அதன் முன்னால் பொருளாளர் கலீல் மௌலவி மற்றும் அல்ஹாஜ் சங்காணி ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

## இம்ரான்கான்..

( முன்பக்கத் தொடர்ச்சி...)

மோசடி வழக்கின் விசாரணைக்கு நேற்று முன்தினம் அவர் ஆஜராகி இருந்தார்.

முன்னதாக அவரை கைது செய்ய லாகூரில் உள்ள அவரது பங்களாவுக்கு 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸார் சென்றனர்.

அப்போது இம்ரான்கானின் பி.டி.ஐ. கட்சியினருக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் 25-க்கு மேற்பட்ட பொலிஸார் காயமடைந்தனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. இந்த நிலையில் இம்ரான்கான் மீது பொலிஸார் நேற்று பயங்கரவாத வழக்கு ஒன்றையும் பதிவு செய்தனர்.

இது அவரது ஆதரவாளர்கள் மத்தியில் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதைப்போல இம்ரான்கான் வீட்டில் நடந்த வன்முறை தொடர்பாக, அவரது கட்சித்தலைவர்கள் சுமார் 17 பேர் உட்பட ஏராளமான தொண்டர்கள் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மேலும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக சுமார் 18 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## டொலருக்கு...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்டதன் பின்னர் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி படிப்படியாக 200 அல்லது 180 ரூபாவாக குறையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 300 ரூபா வரை உயர்ந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

“எமக்கு நான்கு வருட கால அவகாசம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் வழங்கிய இலக்குகளை ஏற்றுக்கொண்டோம், வரவு செலவு திட்டத்தில் பற்றாக்குறை இருக்காது.

இதன்படி, 2026க்குள் வரவு செலவு உபரியாக இருக்கும்.

ஆனால் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டவுடன், கடனை மறுசீரமைக்க முடிந்தவுடன், நமது கடன்கள் அனைத்தையும் செலுத்தி, ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் உபரியாக திரும்புவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஜப்பான், சிங்கப்பூர், ஜெர்மனி அல்லது கொரியா போன்ற நாடுகளைப் போல, ஆண்டின் இறுதியில் நமக்கு கையிருப்பு இருக்கும்.

இதுவே அடுத்த இலக்கு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஆகஸ்ட்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சித் தேர்தல் உட்பட ஏனைய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் அரசாங்க தரப்பில் இருப்பதன் மூலம் விரைவில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவது கஷ்டம் என்று அவர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களில் தமது கட்சி படுதோல்வி அடையாது என்றும் அவர்கள்....

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நீங்கியவர்கள் முழுமையாக ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க மாட்டார்கள் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

எனவே, எதிர்வரும் தேர்தலில் மும்முனைப் போட்டி இடம்பெறும் என அவர்கள் கருதுகிறார்கள்.

அதில் சிறு தொகையின் வாக்குகளாலேயேவெற்றி பெறும் தரப்புக்கு வெற்றி பெற முடியும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

எனவே, எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன் தற்போது நியமனப்பத்திரம் கோரியுள்ள உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் நாமல் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

## இனியும்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

தீட்டக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பிலான காரைதீவு பிரதேச சபை வேட்பாளர் யூ.எல்.என். ஹூதா உமரின் தலைமையில் மாளிகைக்காட்டில் இடம்பெற்ற பெண்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில், எமது மக்களின் தேவைகள் என்ன என்பதும் அவர்களின் எதிர்காலம் என்ன என்பதும் தெரியாமலே தமது காலத்தை கடத்தியவர்களை நாம் நிராகரிக்க வேண்டும். எங்களின் வேட்பாளர்கள் சமூக பற்றுள்ளவர்கள், எதிர்கால சந்ததிகள் பற்றிய கவலையை உடையவர்கள்.

எங்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டவும், இல்லாமலாக்கவும் பல்வேறு வேலைத்திட்டங்களை கடந்த காலங்களில் பலரும் முன்னெடுத்தபோது எங்களின் எண்ணங்கள் உண்மையாக இருந்ததால் தாய்மார்களாகிய நீங்கள் நோன்பு நோற்று இறைவனிடம் கையேந்தி பிராத்தித்தீர்கள். இறைவன் எங்களை பாதுகாத்தான். நமது எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் இறைவன் பாதுகாப்பான். எமது மக்களை வழிநடத்த தூய்மையான அரசியல்வாதிகள் அரசியலின் ஆரம்ப படியிலிருந்தே உருவாக்கப்பட வேண்டும். அப்படியானவர்களையே நாங்கள் உங்கள் முன்னால் கொண்டுவந்துள்ளோம். ஹூதாவை வெற்றிபெற செய்யுங்கள்.

உங்களுக்கும் எனக்குமான பாலமாக இருந்து மாளிகைக்காட்டு மண்ணுக்கான தேவைகளை, உரிமைகளை பெற்றுத்தருவார் என்றார்.

இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளரும், கட்சியின் பிரதித்தேசிய அமைப்பாளருமான எம்.ஏ. அஸ்ரப் தாஹீர், உயர்பீட உறுப்பினர்களான மான்குட்டி ஜுனைதீன், மாவட்டகுழு செயலாளர் ஆசிரியர் ஏ.சி.ஏ. காதர், பொருளாளர் தொழிலதிபர் கலீல் முஸ்தபா உட்பட அகில இலங்கை மக்கள் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பம்பரதெனிய வைத்தியசாலை மதில் அர்ங்குரார்ப்பணம்









பம்பரதெனிய வைத்திய சாலையின் மேல் கட்டிடத்துக்கு முன்னால் அவசர, மற்றும் முக்கிய தேவையாக இருந்த மதில் (கட்டு) வட்டதெனிய, கஸ்வா நலன் புரி சங்கத்தினால் அமைத்து அன்மையில் கோலாகலமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் , வெலம்பொட பொளிஸ் நிலைய தலைமை பொளிஸ் அதிகாரி நீல் பண்டார, வைத்தியர் டாக்டர், ஜயலத், வட்டதெனிய நிர்வாக சபைத் தலைவர் தேஸமான்ய அல்ஹாஜ் எம் ஆர் எம், கியாஸ், அல்ஹாஜ் முஸம்மில் உடயார், கஸ்வா நலன் புரி சங்கத்தின் தலைவர் எம். கே, ரியாஸ் மொஹமத், மற்றும் உருப்பினர்கள்,

வட்டதெனிய முஹ்யித்தீன் ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அஷ்ஷேக் மௌலவி அனஸ் ஹக்கானி ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இவ்வேலைத் திட்டத்திமானது பிரதம அதிதிதிகளால் பெறிதிம் பாராட்டப்பட்டது.

இவ்வேலைத் திட்டத்திற்காக உதவிய அனைத்து வட்டதெனிய ஊர்மக்கள், நல்லுள்ளங்கள்,

நலன் விரும்பிகள், அனைவருக்கும் கஸ்வா நலன் புரி சங்கத்தின் உறுப்பினர்கள் தமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

# இலங்கை - தாய்லாந்து வர்த்தக சபையின் செயற்குழு தெரிவு



இலங்கை - தாய்லாந்து வர்த்தக சபையின் 21வது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பு மெல்பேர்ன் அவென்யூவில் உள்ள சியம் ஹவுஸில் நடைபெற்றது.

இதில் இலங்கை - தாய்லாந்து வர்த்தக சபையின் 2023ஃ2024 ஆம் ஆண்டிற்கான புதிய செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதனடிப்படையில் குறித்த குழு நிழற்பிரதியில்:

முதல் வரிசையில் இடமிருந்து: பொருளாளர் அசிம் முக்தர், உப தலைவர் கமில் வீரசேகர, நிறுவனர் மற்றும் முன்னாள் தலைவர் ரிசான் நசீர், தற்போதைய தலைவர் துஷ்யந்த பஸ்நாயக்க, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹரன்போல், நிறுவனர் மற்றும் முன்னாள் தலைவர் லயனல் பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி லலித் குமாரகே, உப தலைவர் ஏ.எம். முசாஜி, மற்றும் செயலாளர் பிரியந்த கொலன்னகே.

இரண்டாவது வரிசையில் இடமிருந்து நிற்பவர்கள்: உதவிப் பொருளாளர் யசோதா பீரிஸ், குழு உறுப்பினர் அப்துல் சாலிஹீன், குழு உறுப்பினர் வேணுர பெர்னாண்டோ, அமைச்சர் ஆலோசகர் ஆர்த்தித் பிரசார்ட்குல், குழு உறுப்பினர் றியன்சி பெர்னாண்டோ, குழு உறுப்பினர் சந்தன நாணயக்கார, குழு உறுப்பினர் ரொஹான் எல்கிரியவிதான, முதன்மைச் செயலாளர் பீரபத் தோங்ரோட்.

வருடாந்த கூட்டத்தொடரைத் தொடர்ந்து, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் Poj Harnpol ஐ சந்தித்த குழுவினர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் இலங்கைக்கும் - தாய்லாந்துக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இருப்பதன் நன்மைகள் குறித்து வெற்றிகரமான கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.










## அரங்கம்

# ரணிலுக்காக ரணில் கேட்ட பாடலை பாடிய சட்டத்தரணி

இவ்வார அரசியல் நிகழ்வுகள் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கு கடனை அங்கீகரிப்பதோடு, அது தொடர்பாக தொழிற்சங்கங்கள் நடாத்திய பகிஷ்கரிப்புடன் தொடர்புபட்டதாக இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை கூடும் பொழுது இலங்கையின் வேண்டுகோள் விடுத்திருக்கின்ற கடன் தொகை அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது தொழிற்சங்க கூட்டு பகிஷ்கரிப்பை நடத்தியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை சமரசத்துக்குக் கொண்டு வருவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அரசாங்க வைத்தியர்கள் சங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக அவர்களுடைய பணி நிறுத்தம் ஒரு நாளைக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இந்தப் பேச்சு வார்த்தைகளை நடத்தும் அதே சமகாலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் பணியாளர் குழுவின் பணிப்பாளர் சாகர ரத்னாயக்க ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக உட்பட ஜனாதிபதியின் செயலகத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தனர்.

தமது கோரிக்கைகளை முழுமையாகக் கேட்டதன் நிலையில் அரசாங்க தரப்பில் அவர்களுடைய கோரிக்கைக்கு செவிமடுக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. தொழிற்சங்கத்தின் போராட்டத்தை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகியது.

அரச வைத்தியர்கள் சங்கம் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இருந்ததாக ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி கடந்த 15 ஆம் திகதி தமது ஏனைய அலுவல்களை ஒதுக்கி விட்டு முழுமையாக தொழிற்சங்கங்களோடு பேசுவதிலே ஈடுபட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பல மணி நேரப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

வரி தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பலமுறை தெரிவித்து வந்த சாகர ரத்நாயக, தனது நிலைப்பாட்டை ஒளிப்பதிவு செய்து தெரிவிக்க முடியாதா? எனக் கேட்டபோது அங்கிருந்தவர்கள் வாய்கொட்டிச் சிரித்தார்கள். சாகர ரத்னாயகவை விளித்து, சேர்! உங்களுடைய வாய் நொந்திருந்தாலும் நீங்கள் கூறிய விடயங்கள் தொழிற்சங்க நபர்களிடைய மாற்றத்தை ஏற்படுத்த உதவியது எனத் தெரிவித்தார்.

அவருடைய பெயரை அழைத்ததும் முழு மண்டபமும் அதிரும் வகையில் கரகோஷம் செய்து மற்றவர்களுடன் இப்பாடலை ரசித்ததை காணக் கூடியதாக இருந்தது. அமைச்சர் டிரான் அலசும் ஜனாதிபதியுடன் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் இம்மாதம் 19ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. அதன்படி தேர்தல் நடத்தப்படும் வரை உள்ளூராட்சி மன்றங்களுக்கு விசேட ஆணையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. குருநாகல் மாநகர சபையில் ஏற்பட்ட வெற்றிடம் ஒன்றுக்கு பொதுஜன பெரமுனவின் அப்துல் சத்தார் நியமிக்கப்பட்டார்.

ஆனால், இவருக்கு ஒரு நாள் மட்டுமே பதவியில் இருக்க முடிந்தது.

இருந்த உறுப்பினர் ஒருவர் கட்சி மாறி ஹெலிகொப்டர் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதன் காரணமாக அவரது பதவி நீக்கப்பட்டது.

அவரது இடத்துக்கு பொதுஜனவின் அங்கத்தவராக இருந்த அப்துல் சத்தார் நியமிக்கப்பட்டார். ஆனால், அவரால் ஒரு நாள் மட்டுமே பதவியில் இருக்க முடிந்தது. 19ஆம் திகதி சகல உறுப்பினர்களும் பதவிகள் காலியாவதன் காரணமாக அந்த வரிசையில் சத்தாரும் இடம் பெற்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

பாடகருமான ஷிகான் வீரசிங்க இந்தப் பாராட்டு வைப்பதில் இருந்தார். அவரின் அருகே சென்ற ஜனாதிபதி, தனக்கு விரும்பிய ஒரு பாடலைப் பாடுமாறு அவரைக் கேட்டார். ரல்லின் ரல்லே என்ற சிங்களப் பாடலை அவர் பாடினார் எல்லோரும் கரகோஷம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சட்டத்தரணிகள் சங்கம் சட்டத்தரணிகளாக 50 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த சட்டத்தரணிகளை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் ஒன்பதாவது இடத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வசிக்கிறார்.

இந்த நிகழ்வுக்கு ரணில் விக்கிரமசிங்கவை பிரதம அதிதியாக அழைப்பதற்கு சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்து அவரை அணுகியது. ”நான் இதில் ஒரு விருது பெறுபவனாக இருப்பதன் காரணமாக என்னை அழைக்க வேண்டாம். நீங்கள் பிரதம நீதியரசரை அழையுங்கள்” என்று ரணில் ஆலோசனை வழங்கினார். அதன்படி அதன்படி பிரதமர் நீதியரசரே இதன் பிரதம அதிதியாக வருகை தந்தார்.



தினத்தன்று அநேக நிறுவனங்களின் விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டிருந்தன. அத்தினத்தன்று வேலைக்கு வராதவர்களுடைய சம்பளத்தை வெட்டுமாறு தொழில் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார். சீன அரசாங்கம் இலங்கைப் பொலிஸாருக்கு சீருடை வழங்குவதற்காக ஆடைகளை அன்பளிப்பு செய்ய ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வும் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது. ஜனாதிபதி இதனைப் பொறுப்பேற்று இராப்போசன விருந்தும் வழங்கப்பட்டது. ஜனாதிபதி தனது பழைய நண்பர்கள் இருக்கும் ஒவ்வொரு நேசிக்கும்மேசைக்கும் சென்று அவர்களோடு தனித்தனியாகப் பேசினார்.

50 வருடம் பணிபுரிந்த சட்டத்தரணிகள் மூவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு நிகழ்வில் 3 முஸ்லிம்கள் பாராட்டப்பட்டனர். ஜனாதிபதி சட்டத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எம். சுஹைர், பாணந்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி ஹாதி இதில் அடங்குவார்.

**வயதில் குறைந்த நகர பிதா காட்டிய முன்மாதிரி**

ஒரு நாள் மாணவர் சபை உறுப்பினரான அப்துல் சத்தார் நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகிறது. இதன்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு விசேட ஆணையாளர்களை நியமிக்க உள்ளது. இது தொடர்பாக பிரதமர் தினேஷ் குணவர்தன ஆளுனர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடியும் தினம் பத்தொன்பதாம் திகதி விடுமுறை தினமாகும்.

பண்டாரவளை நகர சபையின் தலைவர் முன்மாதிரி காட்டி, அதற்கு முதல் நாளே தனது பொறுப்புக்களையும் வாகனங்களையும் ஒப்படைத்து பதவியில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் ஆளுனர் சபையின் தலைவர் பதவிகளை வைத்த இவர், ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைத் தூ துவராகவும் பதவி வகித்தார். இவருடைய காலத்தில் ஈரானிலிருந்து இலங்கைக்கு கடன் அடிப்படையில் பெட்ரோல் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு அனுப்பப்பட்ட பெற்றோல்களை விற்பனை செய்த பின் பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

வெலிகம அறபாக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

சட்டக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சட்டக் கல்லூரி ஆசிய பவுண்டேஷனின் புலமைப் பரிசிலை வென்றெடுத்தார்.

1968 இருந்து 70 வரை சட்டக் கல்லூரிக்கான செலவை ஈடு செய்வதாக அமைந்தது. 71 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியின் முஸ்லிம் மாணவர்களுக்குத் தலைவராகவும் தெரிவானார்.

2001 ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்ற சுஹைர், உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகள், அடிப்படை உரிமை வழக்குகள் போன்ற அனைத்து வழக்குகளிலும் துடிப்புடன் செயலாற்றினார்.

73இல் சுஹைர் அரச வழக்கறிஞர் சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்தார்.

பல முக்கியமான வழக்குகளில் இவர் ஆஜரானார். உயிர்த்த ஞாயிறு தொடர்பான தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முக்கியமாக ஆஜர் செய்து கைது செய்யப்பட்டிருந்த முஸ்லிம்கள் பலரை விடுவிக்க இவரால் முடிந்தது.

நகர பிதாவான ஜனக்க நிசாந்த ரத்நாயக்க ரின் கடந்த 17ஆம் திகதி தனது பொறுப்புக்களை நகர ஆணையாளரிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினார்.

ஆசியாவிலேயே வயதில் குறைந்த நகர பிதாவான ஜனக நிசாந்த ரத் நாயக்க கடந்த 5 வருட காலமாக பண்டாரவளை நகர பிதாவாகப் பதவி வகித்துள்ளார். அவருடைய பதவிக் காலத்தில் 15 பில்லியனுக்கு மேற்பட்ட பணம் செலவு செய்யப்பட்டு, பண்டாரவளை நகர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

சகல வீதிகளின் கார்பட் பண்ணப்பட்டும் ஒரு சுற்றுலா நகரமாக பண்டாரவளை நகரை அவர் மாற்றி உள்ளார். புதிய சந்தைக் கட்டிடம், நகரை அலங்கரித்தல் உட்பட அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்தார்.

17 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 40 கடைகளை கொண்ட ஐந்து மாடி பொதுச் சந்தையையும் குறுதுகொல்ல கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்குக் கட்டிடத்தையும் 17ஆம் திகதி மக்கள் உரிமை ஆக்கி நகர சபை ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு அவர் பிரியாவிடைபெற்றுச் சென்றுள்ளார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 MARCH 21 - TUESDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# வரும் நோன்பை நோற்க வழி செய்வோம்

நமது தாய்நாடு அதன் வரலாற்றில் என்றுமே எதிர்நோக்காக பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள வேளையில், முஸ்லிம்கள் இன்னும் சில தினங்களில் ரமழான் நோன்பினை ஆரம்பிக்கவுள்ளனர்.

நான்காவது கடமையான ரமழான் நோன்பு ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கட்டாயக் கடமையாக்கப்பட்ட ஒரு மேலான வணக்கமாகும்.

நன்மைகளை கொள்ளையடிக்கக் கூடிய ஒரு மாதம் எம்மை வந்தடைந்திருக்கிறது. இம்மாதத்தின் முழுப் பயனையும் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் உறுதி பூண்டு செயற்பட வேண்டும்.

மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள கால கட்டத்திலே நோன்பு வந்துள்ளது. பசி, பட்டிணி காரணமாக மக்கள் குடும்பத்துடன் உயிரை மாய்த்துக் கொள்ளும் செய்திகளை கூட அடிக்கடி நாம் கேட்கின்றோம். வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வேலை வாய்ப்புகளை இழந்தவர்களது எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இன, மத, பேதமின்றி ஆயிரக்கணக்கானோர் தான் செய்து வந்த தொழில்களை இழந்து பசியைப் போக்குவதற்காக கை நீட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**எப்படி உதவுவது?**

ஒவ்வொரு ஜமாஅத்திலும் எல்லைக்குள் வாழும் மக்களின் நிலையைக் கண்டறிந்து உதவுவதற்கு பள்ளிப்பரிபாலன சபைகள் முன் வர வேண்டும். பண வசதி படைத்தவர்களாக இருந்த பலர் இன்று வருமான வழி வகைகளை இழந்து தவிர்க்கிறார்கள். அவர்கள் தமது நிலையை வெளியே சொல்ல முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே, பள்ளிப்பரிபாலன சபையினர் இப்போதிருந்தே தமது ஜமாஅத்தில் உள்ள அங்கத்தவர்களது நிலையைக் கண்டறிந்து அவ்வாறானவர்களுக்கு உதவும் திட்டங்களை வகுக்க வேண்டும். இது போன்று ஆடம்பரமான இப்தார் நிகழ்வுகள் நடாத்தப்படுவதைத் தடுத்து அதற்காக செலவு செய்யப்படும் பணம் வசதி வாய்ப்பின்றி இருப்போருக்கு உதவுவதற்கு முன் வர வேண்டும்.

சமூக நிறுவனங்கள், நாட்டில் உள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவராலயங்கள், உல்லாசப் பிரயாண ஹோட்டல்களில் இப்தாருக்காகச் செலவு செய்யும் பணத்தை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் வழங்கி அங்கு நிலவும் வறுமையைப் போக்குவதற்கு உதவ வேண்டும். அதன் மூலமே அவர்களால் நோன்பை சரியாக நோற்கக் கூடியதாக இருக்கும்.

நோன்பின் வணக்க வழிபாடுகள் இரவு நேரங்களிலே கூடுதலாக நடைபெறுகின்றன. பல இன பல மத மக்கள் வாழும் இடங்களிலே வாழ்வோர் அருகில் வாழும் மாற்று இன சகோதரர்களுக்கு தொல்லை கொடுக்காது, செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் இன மோதல்கள் கூட ஏற்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தில் மிக நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும். இந்த நோன்பை எம்மைப் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளக் கூடிய வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். ஊர் தலைவர்கள், உலமாக்கள், இந்த விடயத்தில் சமூகத்தை வழிநடாத்த வேண்டும்.

# திருமணம் எனும் நிக்காஹ் திரைப்படத்தின் இயக்குனர் இம்மாதம் இலங்கை வருகிறார்

சென்னை கிராண்ட் ரிஹர்ஸல் மற்றும் மட்டக்களப்பு கூத்தம்பலம் இணைந்து நடத்தும் திரைப்பட இயக்கம் மற்றும் நடிப்பு பயிற்சி பட்டறையில் வளவாளராக கலந்து கொள்ள இயக்குனர் அனீஸ் இலங்கை வருகிறார்.

2023,மார்ச் 30 முதல் ஏப்ரல் 5 வரை மட்டக்களப்பில் நடக்கும் வதிவிட திரைப்பட பயிற்சி நெறியில் அனீஸ் உடன் இணைந்து பிரபல நடிகர், இயக்குனர் நாசர் இணைய நேரலையில் பயிற்சி வழங்க உள்ளார்.

திரைப்பட இயக்குனர் அனீஸ் இயக்குனர் நாசர் அவர்களிடம் பல படங்களில் உதவியாளராக பணிபுரிந்து திரைப்பட கட்டுமானங்களை கற்றுக்கொண்டவர்.

இலக்கிய பட்டதாரியான அனீஸ் திரைப்படம் மற்றும் நாடகமும் அரங்கியலும் துறையில் முதுகலை பெற்றவர். இத்துறையில் முனைவர் பட்டம் பெறும் தருவாயில் இருக்கின்றார்.

ஜெய் ரூ நஸ்ரியா நாஸீம் நடிப்பில் வெளிவந்த இவரது முதல் படம் திருமணம் எனும் நிக்காஹ் வெற்றிப்படம்.

5 ஆண்டுகாலம் சிறைச்சாலையினை ஆய்வு செய்து பகைவருக்கு அருள்வாய் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார.

சசிகுமார் உட்பட முக்கிய நட்சத்திரங்கள்7 நடித்துள்ள இப்படத்தில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளும் நடித்துள்ளனர். இப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது.

அதனை தொடர்ந்து இணையத்தொடர்( றநடி ளநசநைள) மற்றும் புதிய திரைப்படங்கள் இயக்கும் பூர்வாங்க பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

ராடன் தயாரிப்பில் கலர்ஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ஜமீலா நெடுந்தொடரின் தலைமை இயக்குனரான அனீஸ் . அதில் நான் பாடல்கள் எழுதுவதற்கும் என்னை பரிந்துரை செய்தவர். அவரது வழிகாட்டலினால்தான் மூன்று பாடல்களும் வெற்றிப்பாடலாக என்னால் எழுத முடிந்தது.

நல்ல இயக்குனர் என்பதையும் தாண்டி தமிழ் சினிமாவில் நான் சந்தித்த நல்ல மனிதர்களில் அனீஸூம் ஒருவர். ஒரு சகோதரானாய் இருந்து என்னை வழிநடத்துபவர்.

பல்கலைக்கழகங்கள் ,கல்லூரிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்பட பயிற்சி நெறிகளில் வளவாளராக கலந்து அனுபவம் பெற்றவர் அனீஸ். அவரது இலங்கை பயணம் மகிழ்வை தருகிறது.

இலங்கையில் தற்போது திரைப்படத்துறை சார்ந்த ஆர்வமுள்ள பல இளைஞர்கள் உருவாகி வருகின்றனர். சினிமாவை,நடிப்பை,வியாபார நுணுக்கங்களை முறைப்படி கற்றுக்கொள்வதன் மூலமே இங்குள்ள இளைஞர்களால் இத்துறையில் முன்னோக்கி நகரமுடியும்.

(பாடலாசிரியர் அஸ்மின்)



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மனநலமும் ஆலோசனையும்

# நோன்பும் மூளை ஆரோக்கியமும்

மூளை மனித உடலின் மிகவும் முக்கியமான பகுதியாகும்.

இந்த உறுப்பு புத்திசாலித்தனத்தின் இருக்கையாகவும்,

புலன்கள் தரும் தகவல்களை சரியாக அடையாளம் காணும் கருவியாகவும்,

உடல் இயக்கத்தைத் ஆரம்பிக்கும் இடமாகவும்

நடத்தைகளை கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டாளராகவும் செயற்படுகிறது.

இப்படி பல வழிகளில் எமக்கு உறுதுணையாக இருக்கும் எமது மூலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது எமது பொறுப்பு. மூளையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிகளில் மிக முக்கியமான ஒரு வழி நோன்பு நோற்பதாகும்.

நோன்பிருப்பது பொதுவாக நமது அனைத்து ஆரோக்கியத்திலும் அழகான மாற்றங்களை ஏற்படுத்துவது பற்றி நாம் அறிவோம். அதில் எங்கள் மூளையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் மிகவும் வித்தியாசமானவை. விசித்திரமானவை. இது பற்றி துறைசார் வல்லுனர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு முக்கிய தகவல்களை முன்வைக்கின்றனர்.

சுமார் ஆறு மணிநேரம் நோன்பின் பிறகு, எமது உடல் HGH எனும் மனித வளர்ச்சி ஹார்மோன்களை அதிகமாக வெளியிடத் தொடங்குகிறது. இந்த ஹார்மோன் புரதத்தைப் பயன்படுத்துவதை விட கொழுப்பை எரிப்பதற்கு ஆதரவாக இருந்து வளர்சி மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எனவே புரதங்கள் பெரும்பாலும் பழுதடைந்த கலங்களை ஒழுங்கமைப்பு செய்வதுடன் மூளைக் கலங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பயன்படுகிறது. உரஅயடெ புசழறவா உழசஅழநெ (உபுவு) மனித வளர்ச்சி ஹார்மோன் உடலில் வீக்கத்தைக் குறைப்பதுடன் தன்னியக்கத்தை அதிகப்படுத்துவதைத் தூண்டுகிறது. தன்னியக்கவியல் என்பது பயன்படுத்தப்படாத அல்லது சேதமடைந்த கலக் கூறுகளை சுத்தம் செய்து மறுசுழற்சி செய்வதன் மூலம் நமது உயிரணுக்களின் ஆரோக்கியத்தையும் உயிர்வாழ்வையும் ஊக்குவிக்கிறது. கூடுதலாக, மூளையில் இருந்து பெறப்பட்ட நியூரோட்ரோபிக் (டீனுநுகு) எனப்படும் புரதத்தின் அளவை நோன்பு அதிகரிக்கிறது. இந்த செயல்முறைகள் அனைத்தும் மூளையின் செயல்பாட்டில் நேர்மறையான விளைவைக் கொண்டிருக்கின்றன.

மூளையில் உருவாகும் இந்த மாற்றங்கள் அல்லது செயல்முறைகள் அனைத்தும் புரதச் சேமிப்பு, வீக்கத்தைக் குறைத்தல், தன்னியக்கச் செயற்பாடு என்பவற்றை சீராக்கி நமது மூளைக்கு பல நன்மைகளை கொண்டு சேர்க்கின்றன. ஒருபுறம், அவை மூளை கலங்களுக்கு (உநடட) ஏற்படும் சேதத்தை குறைக்கின்றன. எடுத்துக்காட்டாக, அழற்சி எதிர்வினைகளைக் குறைப்பதன் மூலமும், மூளையில் உள்ள கழிவுகளை அகற்றுவதன் மூலமும். மறுபுறம், அவை சரியான மூளை செயல்பாட்டைத் தூண்டுவதன் மூலமும் கலங்களை பழுதுபார்ப்பதை ஊக்குவிப்பதன் மூலமும் புதிய மூளை காலங்களுக்கு இடையேயான இணைப்புகளை உருவாக்குவதன் மூலமும் பங்களிக்கின்றன.

அதேபோன்று மூளைக்குள் தகவல் தொடர்புகளை எளிதாக்குகிறது.

மேலும் இந்த புரதம் டிமென்ஷியா போன்ற முதுமையின் போது ஏற்படும் அறிவாற்றல் பிரச்சனைகள் அல்லது முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் சிக்கல்கள் உருவாகுவதை தடுக்கவும் செய்கிறது.

எனவே நோன்பு நரம்பியல் பாதிப்புகளுக்கு மருந்தாக இருக்கிறது என்பது பேருண்மை.

எனவே இளமை பருவத்தில் இருந்து அல்லது பிள்ளை பருவத்திலிருந்தே நோன்பு நோற்பது மூளையை ஆரோக்கியமாக வைக்கவும் வயோதிபத்தை அடையும் போது ஏற்படும் பல நரம்பியல் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பு பெறவும் காரணமாக இருக்கிறது என்பதையே ஆய்வாளர்கள் உறுதி செய்து இருக்கிறார்கள்.







மட்டக்குளிய சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திருமதி ஜி. ப்ரிதா கான் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது , இதில் பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் ஏ.எஸ். நஜீப்,(பிரதி கல்விப் பணிப்பாளர் மேல் மாகாணம்( தமிழ் மொழி பிரிவு பாடசாலை )மற்றும் திருமதி மும்தாஜ் பேகம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் கொழும்பு வலயம்,) இந்நிகழ்விற்கு மட்டகுளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் அதிபர்களும், நகர சபை உறுப்பினர்களும் சமூக சேவையாளர்களும், தொழில் அதிபர்களும் கலந்து பாடசாலையில் மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(படங்கள் – மொஹமட் நசார்)



புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீனின் முயற்சியினால் உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு மலேசியா மற்றும் உள்நாட்டு தனவந்தர்களின் நிதிப்பங்களிப்புடன் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் (14) செவ்வாய்க் கிழமை சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா தலைமையில் இடம்பெற்றது.









சமகி ஜனபலயே அரசியல் கட்சியின் சர்வதேச பெண்கள் தினத்தினை முன்னிட்டு நேற்று 08ஆம் திகதி கொழும்பு விஹாரமாகாதேவி உள்ளக அரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உலக பெண்கள் தினம் கொண்டப்பட்டது. இந் நிகழ்வில் திருமதி சஜித் பிரேமதாச உட்பட கட்சியின் பெண் அரசியல் உறுப்பிணர்கள் கலந்து கொண்டனர். இம் மாட்டில் பெண்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு முன்னெடுப்புக்கள் அரசியலில் பெண்களுக்கான வாய்ப்புக்கள் நாட்டில் உள்ளுராட்சித் தேர்தல் நடைபெற்று இந்த நாட்டில் உள்ள 52 வீதமான பெண்களுக்கு விகிதசார முறைமைக கேற்ப அரசயில் அதிகாரம் வழங்கல் வேண்டுமெனவும் தீர்மாணங்கள் எடுக்கப்பட்டன.

(அஷ்ரப் ஏ சமத்)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு!







(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச பெண்கள் தின நிகழ்வு அண்மையில் (12) கொழும்பு -லக்ஷ்மன் கதிர்காம நிலையத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்ஹான் பீபி இப்திக்கார் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வு கிழக்கு மற்றும் மேற்கில் பெண்களின் உரிமைகளும் ,மதிப்புக்களும் எனுத் தொனிப்பொருளில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி டாக்டர் தீபிஹா உடகம, சட்டத்தரணி சிவஸ்திகார அருலிங்கம், ஈரான் நாட்டில் இருந்து வருகை தந்த கலாநிதி ஸ்ஹேரேஹ் மிப்ராஜி, கொழும்பு மத்திய வைத்தியசாலையின் சிரேஸ்ட வைத்திய அதிகரி நசிகா அமீர் ஆகியோர்கள் தமது கருத்துக்களை முன் வைத்தனர்

எக்ஸ்பிரஸ் நியுஸ் பிரதம ஆசிரியை ஹனா இப்ராஹிம் இந் நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

அத்துடன் வரவேற்புரையை மீடியாபோரத்தின் செயலாளர் சிஹார் அனீஸ், மீடியா போரத்தின் ஆலோசகர் என்.எம். அமீன் நன்றியுரையையும் நிகழ்த்தினார்கள். இந் நிகழ்வின்போது முஸ்லிம் மீடியா போரத்தின் டயரிகள் அதிதிகளுக்கு கையளிக்கப்பட்டன.

மீடியாபோரத்தின் செயற்குழு உறுப்பிணர்கள், பெண் ஊடகவியலாளர்கள், பெண்கள் அமைப்பின் உறுப்பிணர்களும் பாராளுமன்ற உறுப்பிணர் ஏ.எச்.எம் பௌசி, ஈராண் நாட்டின் கலாச்சாரப் பணிப்பாளர் உட்பட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வின்போது முஸ்லிம் பெண்கள் கலை ,கலாச்சாரம், மற்றும் முஸ்லிம் பெண்கள் உரிமைகள் இஸ்லாம் விரிவாகவும் அல் குர் ஆண் அத்தியாயம் சூறா நிசாவில் என்ற வசனத்தில் முஸ்லிம் பெண்களுக்கு மட்டுமல்ல முழு பெண்களுக்கு இஸ்லாம உரிமைகளை வழங்கியுள்ளது. எனவும் டாக்ர் தீபிஹா அங்கு உரை நிகழ்த்தினார்..

# கொழும்பில் நடைபெற்ற பலஸ்தீனரின் நில நாள்







(அஷ்ரப் ஏ சமத்)

பலஸ்தீனரின் நில நாள் (Land Day – March 30.) முன்னிட்டு இலங்கை அமைந்துள்ள பலஸ்தீன தூ தராலயம் ஏற்பாடு செய்துள்ள இலங்கை ஓவியர்களான ராஜசேகர், ஸ்பின்டோனா ராஜசேகர் கசேந்திராசென்ட்ரா, ஹிசாம் அபுதாஹற ஆகியோரிர் பலஸ்தீன் நாட்டில் நடைபெற்று வரும் அவலங்கள், அங்குள்ள கலை,கலாச்சாரம், அந் நாட்டு மக்கள் துக்கங்கங்கள் அடங்கிய ஓவியக் கண்காட்சி ஒன்று, கொழும்பு-7 யில் அமைந்துள்ள லயனல்வென்ட ஆர்ட் கலரியில் கடந்த புதனன்று அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுகள் பலஸ்தீன் நாட்டுக்கான இலங்கைத் தூதுவரின் அழைப்பின்பேரில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி எம். ராகவன், ஏனைய நாடுகளின் தூதுவர்கள், பலஸ்தீன் -இலங்கை நட்புரவுச் சங்க உறுப்பிணர்கள் அங்குராப்பண நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதில் பலஸ்தீன் நாட்டினைச் சித்தரிக்கும் துக்க நிகழ்வுகளை ஒர் ஓவியம் ஊடாக மக்களுக்கு சித்தரிக்கும் வர்ண வரைபடங்களை ஓவியர்கள் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீன் இழந்த நிலமும் இஸ்ரேலின் தேசமும் ஒன்றே!



**கலாபூஷணம் பரீட் இக்பால்**
**- யாழ்ப்பாணம்**

பலஸ்தீனரின் நில நாள் (Land day-March 30) முன்னிட்டு இலங்கையில் அமைந்துள்ள பலஸ்தீன தூதராலயம் ஏற்பாடு செய்துள்ள ஓவியக் கண்காட்சி ஒன்று, கொழும்பு - 07 இல் அமைந்துள்ள Lionel Wendt Art Gallery இல் மார்ச் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு அங்குரார்ப்பணம் நிகழ்வு இடம்பெறும்.

15 ஆம் திகதி பிற்பகல் 12.30 முதல் இரவு 8 மணி வரையும், 16, 17 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

பலஸ்தீனம் என்பது மிகவும் உயர்வான கலாசாரம் கொண்ட அருள்பாலிக்கப்பட்ட பூமியாகும். முழுக்க முழுக்க பலஸ்தீனர்கள் வாழ்ந்த பலஸ்தீன பூமியில் எவ்வாறு யூதர்கள் புகுந்து கொண்டனர் என்பதை பற்றி சற்று அலசுவோம். உலகில் தாயகம் இல்லாது அமெரிக்கா, ஜெர்மன், பிரித்தானியா, ரஷ்யா இன்னும் பல நாடுகளில் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். யூதர்கள் புத்திக் கூர்மையுடையவர்கள். எல்லா நாடுகளிலும் விஞ்ஞானிகளாகவும் பணக்காரர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும் அந்தந்த நாட்டில் ஆட்சியில் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்களாகவும் இருந்தனர். செல்வாக்காக இருந்தாலும் அந்தந்த நாட்டின் பெரும்பான்மையினருடன் பிரச்சினையுடனே வாழ்ந்து வந்தனர். இந்தக் கட்டத்தில்தான் யூதர்களின் முக்கியஸ்தர்கள் முக்கிய ஒரு முடிவு எடுத்தனர். உலகில் எங்கேயாவது ஓரிடத்தில் யூத ராஜ்ஜியம் அமைக்க முடிவெடுத்தனர். 1896 ஆம் ஆண்டளவில் ஹெர்ஸல் (உநசணட) என்ற ஒஸ்திரிய யூதர் "யூத ராஜ்ஜியம்" என்ற நூலொன்றை வெளியிட்டார். அந்த நூலில் காணப்படுவது உலகில் யூதர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஒரே வழி யூத ராஜ்ஜியம் ஒன்றை அமைப்பதுதான் என குறிப்பிடப்பட்டுள்ளது. பலஸ்தீனில் யூத ராஜ்ஜியம் ஏற்படுத்தப்படல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. யூதர்களின் முக்கியஸ்தர்கள் பலஸ்தீனத்தை ஏன் தெரிவு செய்தார்கள் என்பது பற்றி ஆராய்வோம்.

யூதர்களின் சமயம் தோன்றிய இடம் பலஸ்தீனம் என நம்புகின்றனர். எனவே, பலஸ்தீனத்திலே யூத ராஜ்ஜியத்தை உருவாக்க முடிவு செய்தனர். ஆழளநள அல்லது மூஸா என்கிற இறை தூதருக்கு இறைவனால் அருளப்பட்ட தவ்ராத் வேதத்தையும் பத்துக் கட்டளைகளையும் (10 உழஅஅயனெஅநவெள) அடிப்படையாகக் கொண்டு யூத சமயம் உருவானது. சமய போதனைகள் ஹிப்ரு மொழியிலேயே அமைந்திருந்தது. ஆனால், தற்போது இவர்களின் யூத சமயம் கலப்படமானது. அதாவது, தவ்ராத் வேதம் யூத சமயத்தின் அடிப்படை வேத நூலாக இருந்தபோதும் யூத மத அறிஞர்கள் வியாக்கியானங்களும் மேலதிக கருத்துக்களும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தவ்ராத் வேதம் தூ ய்மையானதாக இல்லை. காலத்திற்கு காலம் யூத மத அறிஞர்கள் இஷ்டம்போல் சில விடயங்களை யூத சமயத்தினுள் உட்புகுத்தி வருகின்றனர். இதனாலேதான் மோசஸிற்கு இறைவனால் அருளப்பட்ட தவ்ராத் வேதம் இன்று குறையுடன் காணப்படுகிறது.

பலஸ்தீனில் யூத ராஜ்ஜியம் அமைப்பதற்காக ஒஸ்திரிய யூதர் ஹெர்ஸல் துருக்கி நாட்டுக்கு சென்றார். பலஸ்தீன் துருக்கியின் ஆட்சியின் கீழ் இருந்தமையால் ஹெர்ஸல் அங்கு சென்று துருக்கி சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீதுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். அதற்கு மன்னர் ஒத்துவரவில்லை. பல நூ ற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த விடயங்களைப் பற்றி இப்பொழுது பேசிக் கொண்டிருப்பது பொருத்தமான விடயமல்ல என்று கூறி பேச்சுவார்த்தையை முறித்துவிட்டார்.

யூதர்கள் உலகில் யூத சமய, கலாசாரத்தை பின்பற்றுவதில்லை. அவர்கள் அந்தந்த நாட்டுக்கேற்ப கிறிஸ்தவ கலாசாரத்தைப் பேணி மக்களைக் கவர்வர். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் இஸ்லாமியர்கள் எனவும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர்கள் எனவும் குறிப்பிடுகின்றனர். ஆனால், இவர்கள் அவ்வாறில்லை. இஸ்ரேல் நாட்டினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைவிலக்கணப்படி பரம்பரை யூத பெற்றோருக்கு அல்லது யூத மதத்தை தழுவிய பெற்றோருக்கு பிறந்த ஒருவரே யூதராக கருதப்படுவார். இதன்படி யூத பெற்றோருக்கு பிறந்து வேறு சமயத்தை பின்பற்றினாலும் அவரும் யூதராகவே கணிக்கப்படுகிறார்.

இவர்கள் மிகவும் புத்திக் கூர்மையுடையவர்களாக இருப்பதனால் அந்தந்த நாட்டின் இரகசியங்களை இலகுவாக கண்டுபிடிக்கக் கூடியவர்களாக இருந்தனர். முதலாவது உலக மகா யுத்தத்தில் ஹிட்லர் படுதோல்வி அடைந்தமைக்கான காரணம் ஜெர்மன் இராணுவ இரகசியங்களை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுபவர்களாக ஜெர்மன் நாட்டில் வாழ்ந்த யூதர்கள் ஒற்றர் வேலை பார்த்தனர். இதனால்தான் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் மூலைமுடுக்கெல்லாம் தேடி ஒரு யூதனையும் விட்டு வைக்கக் கூடாது என்ற நோக்கத்தில் யூதர்களை அழிக்கப் புறப்பட்டான் ஹிட்லர். சுமார் 60 லட்சம் யூதர்களை கொன்று குவித்தான். கொன்று குவித்த யூதர்களில் விஞ்ஞானிகள், உயர் அதிகாரிகள், பலர் அடங்கினர்.

முதலாவது உலகப் போரின்போது பலஸ்தீன் நாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. யூதர்கள் தங்களுக்காக ஹிட்லருக்கு எதிராக ஒற்றர் வேலை பார்த்தமைக்காக நன்றிக்கடனாக யூதர்களுக்கு உதவ முன்வந்தது பிரிட்டிஷ். 1917 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் வெளியுறவு செயலாளரான ஆதர் ஜே பல்போர் என்பவர் யூத மக்களுக்கான தாயகமொன்றை பலஸ்தீனில் அமைப்பதை அங்கீகரிக்கும் பிரகடனம் ஒன்றை கடிதம் மூலமாக பிரித்தானிய யூத தலைவருக்கு அனுப்பி வைத்தார். ஆதர் ஜே பல்போரினால் ஏற்படுத்தப்பட்ட இந்த பிரகடனம்தான் இஸ்ரேல் எனும் நாடு உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது. இந்த பிரகடனத்தின் பயனாக ஐரோப்பாவிலிருந்தும் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தும் யூதர்கள் வந்து பலஸ்தீனில் குடியேறத் தொடங்கினர்.

பலஸ்தீனத்துக்கு உள்ளேயே யூதர்களின் குடியிருப்புக்கள் பெருகின. தங்கள் பூமிக்குள் ஒரு கள்ள தேசம் உருவாவதை அப்போதுதான் பலஸ்தீன மக்கள் உணரத் தொடங்கினர். எனவே, 1920 ஆம் ஆண்டு முதன்முதலாக பலஸ்தீன மக்களுக்கும் யூதர்களுக்கும் இடையே நேரடி மோதல்கள் வெடித்தன.

பிரித்தானியரின் ஆட்சி 1948 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதிமுடிவுக்கு வந்தது. ஆனால், முதல் நாளே 1948 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி நள்ளிரவுடன் யூதர்கள் இஸ்ரேல் தனிநாடு எனவும் சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டனர். தீவிரவாதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு நாடு. தேவைப்படும்போது பலஸ்தீனர்களின் நிலங்களை அபகரித்து தன்னுடன் இணைத்துக்கொள்ளும் நாடு. இவர்கள் கொலை செய்வதற்கு தயங்காதவர்கள். பச்சிளம் பாலகர்களையும் கொலை செய்ய தயக்கம் காட்ட மாட்டார்கள்.

உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ஒரு யூதர். உருவாகும் இஸ்ரேல் நாட்டிற்கு அவரே முதல் பிரதமராக இருக்க வேண்டும் என்பதை யூதர்கள் மட்டுமல்ல அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் விரும்பின. இன்னொருவர் பூமியை ஆக்கிரமித்து உருவாக்கும் ஒரு நாட்டிற்கு தான் பிரதமராக இருக்க முடியாது என்று அறிவித்து ஐன்ஸ்டீன் விலகிவிட்டார்.

பிரிட்டிஷ் ஆரம்பத்தில் யூதர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் நடந்து கொண்டார்கள். ஆனால், இன்றோ பிரிட்டிஷ், அமெரிக்க நாடுகள் உலக முஸ்லிம்களுக்கு பூச்சாண்டி காட்டுவதற்காக இஸ்ரவேலர்களை பயன்படுத்துகின்றனர்.

ஒரு சரியான தலைவன் இல்லாத காரணத்தினால்தான் சொந்த நாட்டில் அகதிகளாக லட்சக்கணக்கான பலஸ்தீனியர்கள் கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டனர். யஸ ீர் அரபாத் என்ற தலைவன் மேலும் ஐம்பது ஆண்டு காலத்திற்கு இடைவிடாத போராட்டங்களை நடாத்தி வந்தார். இப்போது அவரது அத்தியாயமும் முடிந்து விட்டது. மீண்டும் பலஸ்தீனின் கழுத்துக்கு மேலே கேள்விக்குறியாக அந்த பழைய கத்தி தொங்கத் தொடங்கிவிட்டது.

பலஸ்தீன் ஒரு தலைவனற்ற தேசமாக பிறந்து வளர்ந்து நடுவில் ஒரு தலைவனைப் பெற்று இப்போது மீண்டும் தலைவனற்ற தேசமாகியிருக்கிறது. மீண்டும் அங்கே கோரத்தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

வாழ்வதற்கு ஒரு துண்டு நிலமில்லாது போவதன் முழு வலியும் அறிந்தவர்கள், எப்படி பலஸ்தீனியர்களை அதே அவதிக்கு உள்ளாக்கினார்கள்? பழிவாங்குவது என்றாலும் விரட்டியவர்களை அல்லவா பழிவாங்க வேண்டும்? விரட்டியவர்களுடனேயே சேர்ந்து வாழ இடம் கொடுத்தவர்களையா பழிவாங்குவார்கள்? இஸ்ரேல் ஏன் இப்படி ஒரு காரியம் செய்ய வேண்டும்?

பலஸ்தீன் இழந்த நிலம் கிடைக்க அல்லாஹ்விடம் கையேந்துவோம்!

# இறப்பர் செய்கையாளர்களின் திறனை கட்டியெழுப்ப புதிய திட்டம்







(அஷ்ரப் ஏ சமத்)

பிரான்ஸ் அரசும் மற்றும் (MICHELIN Tyre Company) மிச்சிலின் குருப்பின் நிதி உதவியுடன் மொனராகலை. மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 6000 இயற்கை சிறு இறப்பர் செய்கையாளர்களின் திறன் கட்டியெழுப்புவதற்கு புதிய திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத் திட்டம் இறப்பர் பயிற்செய்கையை மீள இலங்கையில் உற்பத்தி செய்து அதனை பிரான்ஸ் நாடு தமது வாகனங்களுக்கான டயர் உற்பத்தியிற்கு இறப்பரை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கையில் முதலிடுகின்றது. இத் திட்டத்தினால் இறப்பர் மேம்பாட்டு பெறுமதி சங்கிலி மற்றும் அதனுடன் இணைந்து சிறு செய்கையாளர்களின் மீட்சிக்கான (றிவர்) திட்டம் பெருந்தோட்டத்துறை அமைச்சும் பிரான்ஸ் அரசாங்கமும் மிச்சிலின் குருப் மற்றும் மிச்சிலின் லங்கா என்ற கம்பனியும் இணைந்து பெப்ரவரி 22 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தினால் பயிற்சி, வெற்றுக்காணிகளை பயன்படுத்துதல் நேரடியாக 3000 குடும்பங்கள் நன்மையடைவர்,

இல்ஙகையின் பொருளாதாரப் பிரச்சினையில் இத்திட்டத்தினால் சிறு விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் அத்துடன் இறப்பர் செய்கை பண்ணப்பட்டு இறப்பர் எடுக்கப்பட்டு இலங்கையிலேயே மெச்சிலின் வாகன டயர்கள்கள் உற்பத்தி செய்யப்படும்.

மேற்படி நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள சுகம்பாயவில் உள்ள பெருந்தோட்ட அமைச்சின் அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரன தலைமையில் அமைச்சின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான துாதுவர் ஜோன் பிரான்கொயிஸ் பக்டெட் , மற்றும் பிரான்ஸ் நாட்டின் மிச்சிலின் கம்பனியின் அதிகாரிகள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரும் கலந்து கொண்டனர்.

இந்த மூன்றாண்டு காலத்திட்டம் அரச தனியார் பங்காண்மையில் முன்னெடுக்கப்படுவதுடன் திட்டத்திற்கான நிதி உதவிப் பங்களிப்பை பிரான்ஸ் பொருளாதார மற்றும் நிதி அமைச்சினால் வழங்கப்படுகின்றன. பசுமையான புத்தாக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட 565,000 யூரோக்களினுடாக இந்த உதவி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிச்சிலின் குருப்பினால் இத்தத் திட்டத்துக்கு இணைந்த நிதி வசதிகள் வழங்கப்படுவதுடன் உள்நாட்டு துணை நிறுவனமான மிச்சிலின் லங்காவினால் செயற்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படும். திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை பிரான்ஸ ின் தனியார் பொறுப்புடைமை நிறுவனமான கெஸ்பா இனால் இலங்கையின் பெருந்தோட்டத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இறப்பர் செய்கை மற்றும் இதர பரந்த பயிர்ச்செய்கை மொனராகலை , அம்பாறை பிரதேசத்தில் 3000 இறப்பர் உற்பத்தியாளர்கள் நன்மையடைய உள்ளனர். இத்திட்டத்திற்கு 1 மில்லியன் யூரோக்களை பிரான்ஸ் அரசு இலங்கையில் முதலிடுகின்றது. 6000 ஏக்கரில் இறப்பர் பயிற்செய்கை பண்ணப்பட்டு அதனுடாக இலங்கையிலிருந்து இறப்பரை ஏற்றுமதி செய்வதற்கு பிரான்ஸ் உடன்பாடு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இறப்பர் திட்டத்திற்காக பிரான்ஸ் இந்தோனிசியா, மலேசியா, தாய்லாந்து நாடுகளில் இத் திட்டத்தினை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

கடந்த காலங்களில் 150 மெற்றிக் டொான் இறப்பர் ஏற்றுமதி இலங்கையில் 75 மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளது இத் திட்டத்தினால் இலங்கையில் எதிர்காலத்தில் மேலும் இறப்பர் ஏற்றுமதி அதிகரிக்கப்படுமென பெருந்தோட்ட அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

## கல்விக்கு வழிகாட்டுபவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்

### அஜ்மீர் தேசிய பாடசாலை அதிபர் எம்.சரூக் தெரிவிப்பு!



(உக்குவளை ஜலீல்)

கல்விக்கு வழிகாட்டுபவர்களுக்கு சமூகம் பூரண ஒத்துழைப்புகளை வழங்கத் தவறக்கூடாது என்று உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை அதிபர் எம்.சரூக் தெரிவித்தார்.

உக்குவளையில் சமீபத்தில் முன்னாள் அதிபர் எம்.நிஸ்பரினால் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய கல்வி அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச பாடசாலைகளின் தரம் - 11 ல் கற்கும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட வினா விடை போட்டி நிகழ்வின்போது அதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார் முக்கிய பிரமுகர்கள் பலரும் அதிதிகளாக சமூகமளித்திருந்த இந்நிகழ்வில் அவர்மேலும் உரையாற்றுகையில்,

கல்விக்கு இஸ்லாம் சிறப்பிடத்தை தந்திருப்பதை நாம் அறிவோம் அதிலும் கற்றவனாக இரு கற்பிப்பவனாக இரு அதற்கு உதவுபவனாக இரு நான்காவதாக இருந்துவிடாதே என்பது நபிகளாரது பொன்மொழியாகும் அந்தவகையில் கல்வி நிலையங்கள் மற்றும் இதுபோன்ற கல்வி அபிவிருத்திச் சங்கங்களின் கல்விப் பணிகள் எமது மாணவ சமூகத்துக்கு மிக அவசியமாகும்

உக்குவளையில் பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் மத்தியில் கல்வியறிவை வளர்க்கும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஆரம்பித்து நடாத்துவது மட்டுன்றி இச்சங்கத்தில் ஆசிரியர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பதன்மூலம் இச்சங்கத்தின் எதிர்க்கால பணிகள் சிறப்பாகப் அமையும் என நம்பலாம் இதில் குறிப்பாக எமது பாடசாலை முன்னாள் அதிபரான நிஸ்பர் இச்சங்கத்தின் தலைவராக செயற்படுவது மகிழ்ச்சியைத்தருகிறது

இன்றைய நிலையில் பல கல்வி நிலையங்களின் கல்விப் பணிகள் இடம்பெற்றாலும் இனைபாடவிதா செயற்பாடுகள் பாடசாலைகள் மூலமாக நடாத்தப்படுவது வரவேற்கத்தக்கது அந்தவகையில் மாணவர்களின் அறிவுத்திறன் விருத்தியைக்கருத்தில் கொண்டு மாணவர்களுக்கான வினாவிடை போட்டிகளை நடாத்துவது பாராட்டத்தக்கது கல்வி அழியாத செல்வம் என்பதால் கற்றவர்களுக்கு என்றும் சிறப்பு உண்டு எனவே கல்விக்கு வழிகாட்டுபவர்களுக்கு சமூகம் ஒத்துழைப்புக்களை வழங்கத் தவறக்கூடாது

உக்குவளை பிரதேசத்தில் இப்படசாலையில் கற்றவர்கள் சிலர் நல்ல நிலைமையில் இருப்பதும் இப்பாடசாலை கல்வி வளர்ச்சியில் பாடுபட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் எம்மோடு இருப்பதும் எமக்குப் பெருமையாகும் ஆசிரியர்களான நாமும் மாணவர்கள் கல்வி நலனில் அக்கரைகொண்டு செயற்புகிறோம் எனவே மாணவ சமூகம் கல்வியால் சிறப்படைய வேண்டும் எனவே மாணவ சமூகம் இதுபோன்ற கிடைக்கும் வாய்ப்புக்களூடாக பயனடையவேண்டும் என்றார்.

## காதி நீதிமன்ற நீதிபதிகள் நியமனம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காதி நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்துக்கு அமைவாக, கல்முனைக்கு பளீல் மௌலானா அமீருல் அன்சார் மௌலானாவும் சாய்ந்தமருதுக்கு அகமது லெவ்வை ஆதம்பாவாவும் சம்மாந்துறைக்கு சம்சுதீன் முஹம்மது இப்றாஹீமும் நிந்தவூருக்கு முஹம்மது இப்றாஹீம் முஹம்மது இல்லியாஸூம் கடந்த 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்முனை மேல் நீதிமன்றத்தில், நீதிபதி முன்னிலையில் பதவியை ஏற்றுக்கொண்டு, சத்தியப் பிரமாணம் செய்த போது எடுக்கப்பட்ட படம்.

## மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி தொடர்பில் உரிய நடவடிக்கை: ஜனாதிபதி செயலகம் அம்பாறை அரசாங்க அதிபரை பணிப்பு!

மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி தொடர்பில் அல்- மீஸ ான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா தவிசாளர் யூ.எல்.என். ஹூதா உமர் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் முன்னுரிமை அளித்து, இந்த விஷயத்தை ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகம் அம்பாறை அரசாங்க அதிபரை எழுத்துமூலம் பணித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து அல்- மீஸ ான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா தவிசாளர் யூ.எல்.என். /ஹதா உமருக்கும், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் சீ.ஏ. சுனித் லோச்சணவுக்கும் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா மையவாடி கடலரிப்புக்குள்ளாகி பாவிக்க முடியாத நிலைக்கு நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. உடனடியாக மாற்று இடத்தில் புதிய ஜனாஸா மையவாடியை அமைக்கவேண்டிய தேவை உள்ளதால் உடனடியாக புதிய காணியொன்றை இதற்காக பெறவேண்டியுள்ளது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து புதிய காணியொன்றை வழங்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமர், காணியமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு மாளிகைக்காடு அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா தவிசாளர் யூ.எல்.என். ஹூதா உமர் கடந்த மாதம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

மேற்படி அரச முக்கியஸ்தர்களுக்கு முன்வைத்த கோரிக்கையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராம மக்களின் ஜனாஸா மையவாடி கடலரிப்பில் முழுமையாக சேதமாகியுள்ளதுடன், ஜனாஸாக்கள் கடலில் அள்ளுண்ட போன வரலாறுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதமாகவே ஜனாதிபதி செயலகம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்த பணிப்பை விடுத்துள்ளது. இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயம் துரித கெதியில் முன்னெடுக்கும் என நம்பப்படுகிறது.

# இனிப்பும் கசப்பும்

– சட்டத்தரணி வைஸ் –

புதிதாக நியமனம் பெற்றுள்ள முஸ்லிம் மத கலாசார விவகாரத் திணைக்களப் பணிப்பாளர் சிறந்த நிர்வாகி, புதிதாக எதையாவது செய்யக்கூடியவர், சமூக சிந்தனையுள்ளவர் என்று பாராட்டி பலரும் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டிருந்தனர். இதனைப் பார்த்த பின் இதை எழுத நினைத்தேன்.

முஸ்லிம் மத கலாசார விவகாரத் திணைக்களம் என்பது ஓர் அரச நிறுவனமாகும். இது ஒரு காலத்தில் தனி அமைச்சாகவும் இருந்தது. ஏனைய சபைகள், குழுக்கள், சங்கங்கள், தொழிற்சங்கம் போன்றல்லாது அதிகாரம் வாய்ந்த அதுவும் முஸ்லிம்களின் விவகாரத்தில் அதிகாரம் வாய்ந்த ஓர் அரச திணைக்களமாகும். அதன் பணிப்பாளர் அரசாங்க நிர்வாக சேவையின் விசேட தரத்தில் இடத்தில் உள்ளவர். நாட்டுக்கே ஒருவர். எனவே, இதற்கு முடிவுகள் எடுக்கும் அதிகாரமும் இருக்க வேண்டும்.

நிறைய விடயங்கள் கூற இருந்தாலும் இன்று ஓரிரு விடயங்களை மட்டும் கூறி முடிக்கிறேன். எனினும், என்றாவது தொடர இடமுண்டு.

இத் திணைக்களத்தோடு இணைந்ததாக இரண்டு அமைப்புகள் உள்ளன. ஒன்று வக்பு சபை மற்றது ஹஜ் கமிட்டி. இவை திணைக்களத்தின் கீழ் இயங்குபவையா அல்லது திணைக்களம் இவற்றின் கீழ் இயங்குகிறதா என்பது தெளிவில்லை. சில சந்தர்ப்பங்களில் இது பெரிய பிரச்சினையாக உள்ளது. அது ஒரு புறம் இருக்கட்டும்.

வக்புசபை வக்பு சட்டத்தை செயற்படுத்த வேண்டிய அமைப்பாகும். பள்ளிவாசல் பள்ளிவாசல் சொத்துக்கள் போன்ற விடயங்களிலும் இது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நாட்டின் பல பள்ளிவாசல்களில் நிர்வாகப் பிரச்சினையும் பள்ளி சொத்துக்களின் பிரச்சினைகளும் உள்ளன. பள்ளி சொத்துக்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பலவந்தமான ஆக்கிரமிப்புகளும் உள்ளன.

தற்போதைய சட்டங்களின் படி பள்ளிவாசல்களின் பெயரில் சொத்துக்களை எழுத முடியாது. பள்ளி சட்ட மனிதனாகக் கருதப்படுவதில்லை. இதனால் சொத்துக்கள் கிடைக்கும் போது அல்லது வக்பு செய்யப்படும் போது அவை அப்போது இருக்கும் நிர்வாகிகள் அதாவது ட்ரஸ்டிமாரின் பெயரில் எழுதப்படுகின்றன. கூடுதலாக தலைவர், செயலாளர் பேரில் எழுதப்படுகின்றன பள்ளிவாசல்களை விட தூரத்தில் உள்ள காணிகள் இப்படி எழுதப்பட்டு சில பரம்பரை சென்ற பின்னர் அவை தமது பாட்டனாரின் சொத்து என்று அவற்றை தனதாக்கிக் கொண்ட சம்பவங்களும் நாட்டில் உள்ளன. இவ்வாறு தமதாக்கிக் கொண்டவர்கள் அவற்றை விற்பனை செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. தமது பிள்ளைகளுக்கு மாற்றிக்கொடுத்த சம்பவங்களும் உண்டு

இவற்றுக்கு எல்லாம் காரணம் பள்ளி சொத்துக்கள் பள்ளியின் பெயருக்கு எழுதப்படாது தனிப்பட்ட பெயர்களில் எழுதுவதாகும். பள்ளியின் சொத்துக்களை பள்ளியின் பெயருக்கு எழுதக்கூடிய வகையில் சட்டங்கள் மாறினால் இந்த பிரச்சினை எழ வழியில்லை.

எனவே வக்பு சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் வரவேண்டும். பள்ளி என்பது சட்ட மனிதன் என்று கருதப்படும் மாற்றங்கள் சட்டத்தில் வரவேண்டும். சொத்துக்கள் பள்ளியின் பெயரிலேயே இருக்கும் நிலை வர வேண்டும்.

எனவே, இதற்கான சட்ட திருத்தங்களைக் கொண்டு வர திணைக்களம் முயற்சிக்க வேண்டும். பள்ளி சொத்துக்கள் வாடகை விடயத்திலும் பல அநீதிகள் நடைபெறுகின்றன. சிலர் சிறிய வாடகையைப் பள்ளிக்கு கொடுத்துவிட்டு அதே சொத்தை உயர்ந்த வாடகைக்கு வேறு எவருக்காவது கொடுத்துவிட்டு வீட்டிலிருந்து கொண்டு லாபம் சம்பாதிப்பதையும் பார்க்கின்றோம். இவை அனைத்துக்கும் முடிவு கட்டப்பட வேண்டும். எனக்குத் தெரிந்த இவ்வாறான சொத்து தனியார் பெயரில் இருந்து பிள்ளைகள் உரிமையாக்கி அதற்கு அடுத்த பரம்பரை துண்டு கேட்டு விற்றுள்ளது. காணிப்பதிவுகளில் எவ்வளவு பரிசீலித்தாலும் அது பள்ளிச் சொத்தாகக் காட்ட மாட்டாது. தனியார் சொத்தாகவே காட்டும்.

வக்பு சபையின் இன்னொரு கடமை பள்ளிவாசல்களில் நிர்வாகத்தைச் சீரமைப்பதாகும். நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிவாசல்களுக்கும் ஒரே யாப்பைக் கொண்டு வர வேண்டும் என்று முன் இருந்த பணிப்பாளர் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பு வந்தவுடன் அவ்வாறு செய்ய முடியாது என்று வக்பு சபை அறிவித்திருந்தது. உடன் அத்திட்டம் கைவிடப்பட்டது. இங்கு அரசியல்வாதிகளின் சிலசில அரசியல்வாதியான அமைச்சரால் நியமிக்கப்படும் வக்பு சபை அதிகாரம் பொருந்தியதா அரசாங்க அமைச்சரவையினால் நியமிக்கப்படும் திணைக்களப்பணிப்பாளர் அதிகாரம் பொருந்தியவரா என்பது பிரச்சினையாகும்.

இங்கு விடயம் என்னவென்றால், திணைக்களப்பணிப்பாளரும் வக்புசபையும் திணைக்களக் கடிதத் தலைப்பிலேயே அறிக்கை விடுகின்றன.

எல்லா பள்ளிகளுக்கும் ஜனநாயக அடிப்படையிலான பொதுவான ஒரே யாப்பைக் கொண்டு வர ஏன் முடியாது? பரம்பரை பரம்பரையாக நாமும் எமது குடும்பமும் தான் பதவியில் இருக்க வேண்டும். இந்தப் பள்ளி எமதும் எமது குடும்பத்தினதும் சொத்து. இது எமது குடும்பம் செலவழித்து கட்டிய பள்ளி. வேறு எவருக்கும் நிர்வாகத்தில் இடம் கொடுக்க முடியாது என்று கூறும் கூட்டம் இருக்கும் வரை இந்தப் பொதுவான யாப்பு கடினம் தான். ஆனால், இந்த நிகழ்ச்சி நிரலைப் புறந்தள்ளிவிட்டு திணைக்களம் ஒரு பொது யாப்பை அதுவும் ஜனநாயக முறையில் முறையாகக் கொண்டு வர திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் சிபாரிசினால் நியமிக்கப்படும் வக்புசபை இருக்கும் வரை இது கடினம் தான். அதேபோன்று மேலாண்மை செலுத்தும் சில தஃவா இயக்கங்களும் இதற்குத் தடையாக இருக்கலாம். இது போன்ற விடயங்களை உலமா சபை செய்ய முடியாது. ஏனெனில், உலமா சபை அரசின், சட்ட அதிகாரம் பெற்ற சபை அல்ல. அது உலமாக்களின் சங்கம். எனவே, சட்டபூர்வமான பொறுப்பும் கடமையும் அதிகாரமும் திணைக்களத்திற்கே உண்டு.

ஹஜ் முகவர் தெரிவு, கோட்டா பகிர்வு போன்ற விடயங்களில் ஊழல்களுக்குக் காரணம் ஹஜ் கமிட்டி, வக்பு சபை போன்றவற்றின் அரசியல் சிபாரிசு நியமனங்களாகும்.

மத்ரஸாக்களை ஒரே தரமாக்கும் நோக்கில் மௌலவி பரீட்சையை அரசாங்க பரீட்சைத் திணைக்களப் பரீட்சையாக மாற்ற எடுத்த முயற்சிகளும் கை கூடாமைக்குக் காரணம் சமூக சிந்தனையற்ற சிலரின் செயல்பாடுகளாகும்.

இன்னும் இருக்கின்றன இன்னொரு நாள் எழுதுகிறேன்.

அதுவரை இது போன்ற விடயங்களில் பயமின்றி அரசியலுக்குப் பயப்படாது அதிகாரத்தைப் பாவித்து செயற்பட பணிப்பாளருக்கு சக்தியையும் துணிவையும் கொடுக்க அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

# மின் கட்டணம் செலுத்தவில்லை என்றால் மின் துண்டிக்கபட கூடாது!

(செ.தி.பெருமாள்)

மின் பட்டியலை உரிய நேரத்தில் குறிப்பிட்ட திகதியில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் சபையில் பிரதேஷசபை உறுப்பினர் ராஜ் அசோக் பிரேரணை முன் வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் மின் கட்டணம் அதிகரிப்பினால் பெரும்பாலும் மலையக மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட திகதிக்கு மின் பட்டியல் வழங்க முடியாமல் போனால் மின் அலகுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது உ ம் 90 அலகுகளுக்கு மேல் செல்லும் போது கட்டணம் இரட்டிப்பாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏற்கணவே அதிகம் இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.



அது மட்டுமல்லாமல் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனையில் மலையக மக்கள் பெரும் கஷ்டத்திக்கு மத்தியில் தனது வாழ்கையை கொண்டு செல்கின்றார்கள் அதிகமான சுமைகள். இதனை கருத்தில் கொண்டு மின் கட்டணம் செலுத்தவில்லை என்றால் அவர்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் மின் துண்டிகாமல் மீண்டும் வாய்ப்பு வழங்க வேண்டும்,

இந்த விடயங்களை சபையில் சுட்டிகாட்டி சம்பந்தபட்ட ஜனாதிபதி செயலகம், மின் சக்தி அமைச்சர், இலங்கை மின்சார கூட்டுதாபனதிக்கு கடிதம் மூலம் தெரிவிக்கும் படியும், சம்பந்தபட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்குபடியும் ராஜ் அசோக் தெரிவித்தார்.








அகில இலங்கை முஸ்லீம் லீக் இளைஞர் முன்னணி களுத்துறை மாவட்ட இளைஞர்களுக்கான முழு நாள் இளைஞர் தலைமைத்துவ மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி தெஹிவளையில் இடம்பெற்றது. 100 இளைஞர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில், சிரேஷ்ட ஊடகவியலாளரும், முஸ்லிம் மீடிய போரத்தின் முன்னாள் தலைவருமான என்.எம் அமீன், அஹமட் முனவ்வர் மற்றும் கௌரவ அதிதியாக இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் எம்.பி., ACUMLYF தேசிய தலைவர் லுக்மான் ஷஹாப்தீன், இலங்கைக்கான பாலஸ்தீன் நாட்டின் தூதுவர் டாக்டர் சுஹைர் ஹம்சவுல்லாஹ் தர் ஜைத் ஆகியோர் கலந்து கொண்டனர். UOC யை சேர்ந்த பேராசிரியர் மஹீஸ், அஜ்வர்தீன் இலங்கை பாராளுமன்றம் மற்றும் யாசிர் லஹிர், ஹிஷாம் சுஹைல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சம்மாந்துறை மத்திய கல்லூரி இல்ல விளையாட்டு போட்டி:

## சிவப்பு இல்லம் சம்பியனானது






(நூருல் ஹுதா உமர்)


பல்லாயிரக்கணக்கான கல்விமான்கள், பன்முக ஆளுமைகள், அரசியல் தலைமைகளை உருவாக்கிய நீண்ட வரலாறும் பாரம்பரியமும் கொண்ட சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (தே. பாடசாலை)

2023ம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி இறுதிநாள் நிகழ்வுகள் வெகுசிறப்பாக இன்று நடைபெற்று முடிந்தது.

பாடசாலை அதிபர் திருமதி யூ. நஜீபா ஏ.றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டார். மேலும் விசேட அதிதிகளாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம். செய்யத் உமர் மௌலானா மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனீபா ஆகியோர் கலந்து கொண்டார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம் ஹனிபா உட்பட சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், அரசியல் பிரமுகர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பாடசாலை காணிக்கான பத்திரத்தை பிரதேச செயலாளர் கல்வித்திணைக்களத்தின் சார்பில் சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம். செய்யத் உமர் மௌலானாவிடம் கையளித்தார்.

சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற இல்லங்கள் போட்டியிட்ட இந்த இல்லவிளையாட்டு போட்டியில் சிவப்பு இல்லம் இவ்வாண்டுக்கான சாம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.



# உள்ளூராட்சி சபைகள் ஆய்வுக்கு வரும் ஒய்வு!



சுஐப்,எம்,காசிம்

ஓய்வுக்கு வரும் உள்ளூராட்சிகளை ஆய்வுக்குட்படுத்தும் அலசலிது. ஊர் மட்டத்திலான அபிவிருத்திகளை முன்னெடுக்க அறிமுகமானதுதான் இந்தச் சபைகள். இன்றோ தேசிய அதிகாரங்களை ஆரூடங் கூறும் அடிமட்டக் கணிப்பீட்டுக் களங்களாக இவை அமைந்துவிட்டன. கடந்த சில காலங்களாக இச்சபைகளின் ஆயுட்காலங்கள் அரசாங்கத்தால் கெட்டியாக்கப்பட்டது. ஒரு வருடத்துக்கு மேல் இவற்றின் ஆயுளைக் கெட்டியாக்க முடியாது. அப்படியிருந்தும் ஆகுமானதை எல்லாம் ஆக்கப்பார்த்தது இந்த அரசாங்கம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அடித்தளமிட்டதும் இந்த உள்ளூராட்சிகளால்தான். இதனால், இச்சபைகள் இல்லாமல் எந்தத் தேர்தலுக்கும் செல்வதில்லை என்றுதான் இந்த அரசு எண்ணியது. இந்த எண்ணத்தோடுதான் இச்சபைகளை ஓராண்டும் நீடித்தது. நீடித்த அதே ஆண்டில்தான் (2022) அரசியல் பூகம்பமும் வெடித்தது. பெப்ரவரியில் நீட்டப்பட, ஏப்ரலில் ஆட்டங்காண ஆரம்பித்தன ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கோட்டைகள். இதனால் பிரபலங்கள் பதவி துறந்து நாட்டை பிரதானமானவர் பாரமேற்றுள்ளார்.

இப்படியொரு பின்னணியில், மீண்டும் ஒரு ஆருடத் தேர்தலுக்கு அரசாங்கம் செல்லப்போவதில்லை. காரணம், கை நிறைய இருந்தாலும் கை நீட்டிச் சொல்வதற்குப் பலமான ஒரு காரணம் இருப்பதால்தான். பொருளாதார நெருக்கடி நீங்கும் வரைக்கும் இந்தக் காரணம் கனதியுடனே இருக்கப்போகிறது. ஆம், தேர்தல் தேவைதான். நாடு உள்ள நிலையில் உள்ளூராட்சிகளுக்கு எட்டாயிரம் உறுப்பினர்கள் தேவையில்லையே! ஜனாதிபதியின் யதார்த்தம் எப்படிப் பொருந்துகிறது. பொருந்துகிறதோ அல்லது பொருத்தப்படுகிறதோ இன்றைய சூழலுடன் இயைந்தே செல்கிறது இக்காரணம்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்த அதிக கொடுப்பனவுகளைக் கோருகையிலும் வரி உயர்வைக் குறைக்குமாறு கூப்பாடுகள் வைக்கப்படுகையிலும் தேர்தலையுமா கோருகின்றனர்? இன்று, நாலாபுறமும் இப்புதிய கருத்துக்களையே கேட்க முடிகிறது. எனவே, கை நீட்டிச் சொல்லப்படும் காரணம் கனதியாவதாகவே கருதத் தோணுகிறது. மக்களின் ஆணையை ஆகக் குறைந்தது நாலு வருடங்களுக்குப் பாதுகாக்க முடியாத இலட்சணத்தில்தான் இந்த உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன. அதுவும், கலப்பு முறையில் (வட்டாரம், வீதாசாரம்) தெரிவானதால் இம்முறை அசிங்கங்கள் அதிகம் இச்சபைகளில் அரங்கேறின.

ஒரு மாதத்துக்குள் பல தடவைகள் சில சபைகளின் ஆட்சிகள் கவிழ்ந்து புரண்டன. ஏழைகளின் வாழ்க்கை ஒரு கவளச் சோற்றுக்கு ஊசலாடுகையில் உள்ளூராட்சித் தலைவர்கள், உறுப்பினர்களின் ஆசைகள் ஒரு கோடிக்கு விலைபோகிறது. இதனால், உள்ளூராட்சித் தேர்தலுக்கு உத்தேச திருத்தத்தை (கலப்புமுறை) முன்மொழிந்த பல அரசியல்வாதிகளின் சபைகளிலும் மக்கள் ஆணைகள் கவிழ்க்கப்படுவதும் நிமிர்த்தப்படுவதுமாகவே நிலைமைகள் இருந்தன.

எனவே, எல்லோரும் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் மக்கள் ஆணையைப் பாதுகாக்கும் புதிய முறைபற்றிச் சிந்திக்க இச்சபைகளின் ஓய்வு காலத்தைப் பயன்படுத்தலாம். கலப்பு முறையிலுள்ள ஓட்டைகளை கண்டு களையலாம் ஒன்றுபடுங்கள். சபைகளின் அதிகாரங்கள் தனி ஒருவரிடம் குவிந்திராமல் கூட்டுக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, தவிசாளர் குழு, முதல்வர் குழு என்ற வட்டத்துக்குள் உள்ளூரா ட்சி சபைகளின் அதிகாரம் பரவலாக்கப்படலாம்.

# தேவஹூவவில் கோலாகலமாக நடைபெற்ற முப்பெரும் விழா







ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் அகில இலங்கை இளம் எழுத்தாளர் சம்மேளனம் ஆகியன இணைந்து, கலை இலக்கிய கல்விப்பணி புரிந்தவர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சையில் திறமை காட்டிய மாணவர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட முப்பெரும் விழா, 12ஃ03ஃ2023 ஞாயிற்றுகிழமை, மஃமாஃகஃ தேவஹூவ முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில், அதிபர் எம்.ஐ. இம்தியாஸ் மொஹமத் தலைமையில் கோலாகலமாக இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட மூத்த ஊடகவியலாளர் "கலாபூஷணம்" எம்.ஏ.எம். நிலாம் (ஈழத்து நூன்), தென் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். எம்.எம் நபீஸ் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவதையும், அகில இலங்கை இளம் எழுத்தாளர் சம்மேளன தேசிய அமைப்பாளர் ரஷீத் எம். றியாழ், சம்மேளனத் தலைவர் எம். நிஜாமுதீன், பொதுச்செயலாளர் மௌலவி ஐ.ஏ. காதிர் கான் மற்றும் கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியத்துறை, சமூக சேவைப்பணிகளில் ஈடுபாடுள்ளவர்கள் உள்ளிட்ட மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்விழாவில், பிரதேச ஊடகவியலாளர்கள், நாட்டுக்காக சமூகப்பணி புரிந்தோர்கள் பலரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் இலக்கியச் சொற்பொழிவுகள் போன்ற போட்டி நிகழ்வுகளில், தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவ மாணவிகளும் இதன்போது விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

( ஐ.ஏ. காதிர் கான் – அஷ்ரப் ஏ. சமத் )

## ஆபத்தான்...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

காலத்தை உள்ளடக்கியதான இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை (18) கொழும்பு 10 தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எம்.எம்.ஏ.கபூர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டபோதே பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

கலாநிதி ரவுப் ஸெய்ன் நாடறிந் ஆய்வாளர் வளவாளர் ஆண்மீகத்துறையில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமல்லாது அம்பாறை மவாட்டத்தில் இறக்காமம் கிராமத்தில் ஊருக்கு பெருமை சேர்க்கின்றவர். ஏராளமான நூல்களை எங்களுக்கு தந்திருக்கின்ற ஒரு எழுத்தாளராக எங்களுக்கு முன் அவர் படைத்திருக்கின்றார்.

இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு என்ற மகுடத்துடனான சுதந்திரம் வரையிலான காலப்பகுதியில் ஆய்வு செய்திருக்கின்ற இந்த நூல் முக்கியமான ஒரு வரலாற்றுப் பங்களிப்பை செய்திருக்கின்றது என்பதனையிட்டு அவருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

இலங்கை முஸ்லிம்களுடைய வரலாற்றுப் பங்களிப்பை ஆவணப்படுத்துகின்ற பெரும்பணியை இவருக்குமுன் பலரும் செய்திருக்கின்றார்கள் அந்த நீண்ட பட்டியலில் கலாநிதி சுக்ரி, எம்.எச் சமீம், எஸ்.எச்.கமால்டீன், ஏ.எம்.ஏ.அஸீஸ், லத்தீப் பாறுக், எஸ்.எச்.எம்.ஜமீல். எம்.எம்.மஹ்றூப் உள்ளிட்ட பலர் பெரும் பங்களிப்பை செய்துள்ளனர். இவற்றையெல்லாம் விட ஒரு வித்தியாசமான பாங்கிலே அவர்களுடைய ஆய்வுகளையும் மேற்கோல் காட்டி அதைவிடவும் முஸ்லிம் அல்லாதவர்களின் அதாவது லோனா தேவராஜ், குமாரி ஜெயவர்த்தன போன்ற மிகச் சிறந்த வரலாற்று ஆசிரியர்கள் பலரினை மேற்கோல் காட்டி நல்ல இந்த நூலை எங்களுக்கு இவர் தந்திருக்கின்றார் என்பது உண்மையில் இந்த நூலை ஆழமாக படிக்க வேண்டிய ஒரு கடமை இந்த சமுகம் பற்றிய சரியான விழிப்புணர்வை மாற்று சமுகத்திற்கு எத்தி வைக்க வேண்டிய பணி எங்கள் எல்லோருக்கும் உள்ள பொறுப்புணர்ச்சியாக கொள்ள வேண்டும்.

கடந்த வருடம் இந்த நாட்டிலே நடந்த மக்கள் புரட்சி இந்த நாட்டினுடைய அரசியலையே தலைகீழாக புரட்டியுள்ளது. அந்த மக்கள் புரட்சிக்கு வித்திட்ட பொருளாதார வீழ்ச்சி இன்றும் எங்களை இயல்பு வாழ்க்கைக்கு வருவதற்கு இயலாத ஒரு நிலைமையை தோற்று வித்துள்ளது. ஒவ்வொருவரும் அன்றாடம் அடுத்த நாள் எங்களுடைய வாழ்வாதாரத்தை பற்றி சிந்திக்க வேண்டிய ஒரு கட்டத்திலே இருந்து கொண்டு இருக்கின்றோம். இன்னும் கூடுதலான வரிச்சுமையையும் ஒவ்வொரு துறையிலும் கட்டண உயர்வுகளை விலைவாசி உயர்வுகளை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த அந்த புரட்சியினால் நாங்கள் எல்லோரும் பீதி கொண்டிருந்த மிகப் பெரிய அச்ச உணர்வு எங்களை விட்டு அகன்று இருக்கின்றது என்ற நிம்மதிப் பெருமூச்சையும் நாங்கள் விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவிதமாக முஸ்லிம்களுக்கிடையிலான வெறுப்புக் கலாச்சாரத்தை உருவாக்கி அதன் மூலமாக அதற்கென்று ஒரு அரசியல் நியாயத்தை கற்பிக்கின்ற ஆபத்தான ஒரு நிலையை இந்த நாட்டின் பெரும்பான்மை சமுகத்தில் விதைக்கின்ற ஒரு மோசமான கலாசாரம் உருவாகிக் கொண்டு வந்தது. அந்த கலாச்சாரம் வேண்டும் என்றே அரசியல் காரணத்திற்காகத்தான் உருவாக்கப்பட்டது என்பதை இன்று பெரும்பான்மை சமுகங்களும் உணர்ந்து கொள்ளும் அளவிற்கு நாட்டிலே நடந்த இந்த சமுகப் புரட்சி அதனோடு சேர்ந்து நடந்திருக்கின்ற பொருளாதார வீழ்ச்சி என்பன எடுத்துக் காட்டுகின்றன. இந்த காரணங்களை எல்லாம் அடிப்படையாக வைத்து ஓரளவுக்கு நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நூலின் மூலம் நூலாசிரியர் எப்படியெல்லாம் வெள்வேறு துறைகளில் முஸ்லிம்களுடைய பங்களிப்பு ஆரம்ப காலம் தொட்டு இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு துணையாக அமைந்திருந்தது என்பதற்காக பல முக்கியமான அத்தியாயங்களை வகைப்படுத்தி எங்களுக்கு தந்திருக்கிறார் என்பது முக்கியமான விசயம். பொருளாதார துறை, தேசிய இறைமை பாதுகாப்பு துறை, அரசியல் பங்களிப்பு முஸ்லிம்களின் மருத்துவத் துறை பங்களிப்பு, சமய கலாசார துறை என்று பல துறைகளில் இவற்றை வேறுபடுத்தி ஆய்வு செய்கின்ற இந்த முயற்சி மூலம் உண்மையில் வெறும் வந்தேறு குடிகளாக மாத்திரம் பார்க்கப்பட்ட ஒரு சமுகம் வந்தேறு குடிகள் மாத்திரமல்ல வந்தேறு குடிகளாக வந்து இருக்கின்ற பூர்வீகக் குடிகளின் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றமாதிரி எங்களை சித்தரிக்க முயன்ற பலருக்கு இந்த நூலின் மூலம் நல்ல விடைகளை ஆசிரியர் தருகிறார் என்பதுதான் இதில் முக்கியமான விடயம்.

எமது நாடு 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் கைப்பற்றப்பட்டு முதலில் கரையோரப் பகுதிகளும் பிறகு மலையகப் பகுதிகளும் முழு நாடும் உள்ளாக காலணித்துவ ஆட்சியின் கீழ் இருந்தபோதிலும் கூட இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான ஆதிவாசிகளைத் தவிர மற்ற எல்லோரும் வந்தேறு குடிகள்தான் என்றளவிற்கு இந்த நாட்டிலே ஏதோ ஒரு வகையில் இங்கு வந்து ஆக்கிரமிப்புகள் படையெடுப்புகள் மூலம் வந்தவர்கள்தான் இங்கிருக்கின்ற சனப்பரம்கலை உருவாக்கினார்கள் என்பது வரலாறு.

அன்மையிலே நான் தெகியத்த கண்டிய பிரதேசத்திற்கு சென்றபோது அங்கிருக்கின்ற கினானிகல என்ற பிரதேசத்தில் ஆதிவாசிகளோடும் ஆதிவாசி தலைவர்களோடும் நீண்ட நேரம் உரையாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுடைய பாசையில் பேசினார்கள் அதனை அந்த ஆதிவாசி சமுகத்தில் இருந்த இன்னொரு வாலிபர் சிங்களத்தில் மொழி பெயர்த்து சொல்லிக் கொண்டிருந்தார்.

நான் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் என்ற காரணத்தினால் எப்படியெல்லாம் முஸ்லிம்கள் ஆதிவாசிகளுக்கு உதவியாக இருந்தார்கள் என்பதனை ஆரம்ப காலத்தில் இருந்து எங்களுக்கு எப்படி முஸ்லிம்கள் உதவினார்கள் என்பதைப் பற்றியும் கௌானிகலவில் இருந்து கதிர்காம கோயிலுக்கு தாங்கள் நடந்துபோய் காணிக்கைகளை செய்து வரும்போது அவர்கள் நடந்து செல்லும்போது போகின்ற வழியில் இருக்கின்ற முஸ்லிம் கிராமங்களிலும் முஸ்லிம்களால் அவர்களுக்கு கிடைக்கின்ற உபசரிப்புக்களைப் பற்றி இன்று நேற்று அல்லாமல் எமது மூதாதையர் காலத்தில் இருந்து நாங்கள் கதிர்காமத்திற்கு செல்லும்போது உபசரிப்புக்களை மட்டுமல்லாது பணிவிடைகளையும் ஏன் தங்குவாதற்கு வசதிகளையும்கூட செய்து மிகப் பெரும் பணிகளையும் செய்திருக்கின்றார்கள் என்று மிகவும் சிலாபித்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆரம்ப காலத்தில் இருந்து தங்களுடைய பிரதேசங்களுக்கு வந்த முஸ்லிம் பணிக்கர்களைப் பற்றி அந்த ஆதிவாசி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். டொக்டர் ஸெய்னுடைய ஊரில்கூட இந்த பணிக்கர் வர்க்கம் காட்டு யானைகளைப் பிடித்து அவைகளை மற்ற வேலைகளுக்கு பயன்படுத்தி இருக்கின்ற பணியைச் செய்த நீண்டதொரு பாரம்பரியம் முஸ்லிம்களுக்கு இருந்திருக்கின்றது என்பதை அந்த வேடுவத் தலைவர் உறுதி செய்தது மாத்திரமல்ல எப்படியெல்லாம் பூர்வீக காலம் தொட்டு தங்களுடைய இந்த பண்டமாற்றுப் பணிகளை நாங்கள் அவர்களுக்கும் அவர்கள் எங்களுக்கும் உதவியாக இருந்தார்கள் என்பதை கூறினார்.

குறிப்பாக சொல்லப்படுகின்ற தவளம என்ற கரையோரப் பகுதிகளில் இருந்து மலை நாட்டுக்கு பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான அந்த வியாபார நோக்கத்துடனான பயணத்தை முஸ்லிம்கள் தங்கள் பிரதேசங்களினூடாக மேற் கொண்டபோது தங்களுக்கு அவர்கள் இலவசமாக பரிசுப் பொருட்களை தந்துவிட்டுப் போவார்கள் என்ற விடயங்களை எல்லாம் ஒரு ஆதிவாசித் தலைவர் என்னிடத்தில் சொல்கின்ற அளவிற்கு முஸ்லிம்களைப் பற்றியும் அவர்களின் பூர்வீகத்தைப் பற்றியும் அவர்கள் அதற்கு சாட்சியாக இருந்து பல விடயங்களை பகிர்ந்து கொண்டபோது எப்படியெல்லாம் முஸ்லிம் சமுகம் ஆரம்ப காலத்தில் இருந்து இந்த நாட்டின் பல துறைகளிலும் ஈடுபாட்டுடன் பங்களிப்புச் செய்துள்ளோம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்தப் புத்தகம் எப்படி முஸ்லிம்களுடைய வணிகத் தொடர்பாடல் வந்த ஆக்கிரமிப்பாளர்களின் சொந்த சுயலாப நோக்கத்திற்கு முறணாக இருந்தபோது எப்படியெல்லாம் பழி வாக்கப்பட்டார்கள் என்ற விசயத்தையும் இங்கு ஆராய்வது மட்டுமல்ல நடந்த அநியாயங்கள், அக்கரமங்கள் எப்படியெல்லாம் கடந்த காலங்களிலே கரையோரப் பிரதேசங்களுக்கும் மலையகத்திற்கும் இடையிலான உறவுப்பாலமாக இருந்த முஸ்லிம் வணிகர்களுக்கு கரையோரப் பகுதிகளில் ஆபத்து இருந்தபோது குறிப்பாக போத்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் மோசமான பழிவாங்கள்கள் உள்வாங்கப்பட்டு நிறையப்பேர் பூண்டோடு கொலை செய்யப்படுகின்ற நிலவரங்கள் நடைபெற்றபோது கண்டிய மன்னர்கள் அவர்களை கிழக்குப் பிரதேசங்களில் குடியேற்றினார்கள் என்ற வரலாறும் நாங்கள் அறிந்த விசயம். இது நிறைய இடங்களில் ஆவணப்படுத்தப்பட்டு தெளிவாக இந்த நாட்டில் முஸ்லிம்களுடைய பூர்வீகம் குறித்த பல தடைகள் இருந்தபோதும் அவற்றையெல்லாம் தாண்டி மிக பலமையான தடையங்களை இந்தப் புத்தகம் ஆராய்ந்து ஆவணப்படுத்துகின்றது என்பதும் மிகவும் பாராட்டத்தக்கது.

உண்மையில் இயமுமாக இருந்தால் சிங்கள மொழியில் மொழி பெயர்ப்பது முக்கியமானது என நான் கருதுகின்றேன். ஆங்கிலத்தில் வருவதும் பிரியோசனமாக இருக்கும் எல்லாவற்றையும் விட மிகப் பிரியோசமான விடயம் இவ்வாறானதொரு நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படுவதன் மூலம் இன்னும் இன்னும் முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த நாட்டின் முஸ்லிம்களுடைய பூர்வீகம் சம்பந்தமான சரியானதொரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கு அது வசதியாக அமையும் அதற்கான முயற்சியை ஆசிரியரும் அவருக்கு துணையாக வந்திருக்கின்ற ஏனைய சமுகத் தலைமைகளும் அவருக்கு பக்கத்துணையான இருந்து அவருடைய இந்த பணியை இன்னும் சிறப்பிக்கச் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றார் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம்.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.எம்.மஸாஹிர் மற்றும் விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உட்பட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## எமக்கெதிரான...

( முன்பக்கத் தொடர்ச்சி...)

நாம் வெளிப்படுத்த வேண்டும். அச்ச உணர்வை அகற்றி நாம் மீண்டும் இயல்பு நிலைக்குள் பிரவேசிக்க வேண்டும். ஜனநாயக சூழலை இந்நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.இதன் மூலம் தான் இந்நாட்டில் சிறந்த தலைமைத்துவங்களை உருவாக்க முடியும். இதனை அகற்றுவதற்கு நாங்கள் ஜனநாயக ரீதியான வழிமுறைகளையே கையாள வேண்டியுள்ளது - என இம்தியாஸ் பாக்கீர் தெரிவித்தார்.

களுத்தறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ மற்றும் திறன் விருத்தி செயலமர்வு மாவட்டத் தலைவர் எம்.எம்.எம் ஜெளபர் தலைமையில் கொழும்பு ஸம் ஸம் நிறுவன கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இலங்கைக்கான பலஸ்தீன நாட்டு தூதுவர் கலாநிதி ஸூஹைர் எம் எச் டார்ட் செய்ட் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் முஸ்லிம் லீக்கின் வரலாறு தொடர்பாக அதன் முன்னாள் தலைவர்களில் ஒருவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான என் எம் அமீன் குறிப்புரை நிகழ்த்தியதோடு, ஊக்குவிப்பு மனித வள மேம்பாட்டு பேச்சாளர் அஷ்ஷெய்க் யாஸிர் லாஹிர் நளீமி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியர் கலாநிதி எம் டி எம் மஹீஸ் மற்றும் பாராளுமன்றத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் எம் அஜிவதீன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

களுத்துறை மாவட்ட சமூகப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு ஆறு மாதங்களுக்குட்பட்ட நான்கு சமூக குழு ஆய்வு செயற்திட்டமும;(Community Need Assessment) இதன் போது வளவாளர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

களுத்துறை மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்கற்கைகளில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்சம்

1977 - 1979 ஆம் ஆண்டு காலப்குதியில் மக்கள் விடுதலை முன்னணி அடிமட்ட அரசியல் கட்சியாக செயற்பட்டு வந்தது. எமது இளைஞர் சமூகம் அதுபோன்ற அடிப்படைவாத, வன்முறை செயற்பாடுகளுக்கு செல்லாமல் தவிர்ப்பதற்காக எமது தலைவர்கள் முஸ்லிம் சந்ததியினரின் எதிர்காலம் பற்றி சிந்தித்து இந்த முஸ்லிம் லீக் திட்டத்தை ஆரம்பித்தார்கள்.

சரியான விடயங்களைச் செய்தால் சமூகம் எம்மை நம்பும். நம்பிக்கையை கொடுத்தால் சமூகம் எமக்கு உதவும். சமூகத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் சரியான நேர்மையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அனைவருக்கும் வாயப்பளிக்க வேண்டும். சகலரும் தலைவர்களாக வேண்டும்.நான் இல்லை நாம் என்ற கருத்தோட்டம் சகலரின் மனதிலும் தோற்றம் பெற வேண்டும்.

எமது எதிர்காலத்தை நாங்களே திட்டமிட வேண்டும். அந்த திட்டத்தினூடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுக்கு சுமையான சமூகம் இல்லை. சொந்த உழைப்பில் நிலைத்திருக்க கூடிய சமூகத்தை உருவாக்க நாம் எமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். நூறு வீதம் சகல திட்டங்களையும் செய்ய முடியாவிட்டாலும், ஒரு அடியாவது முன்வைக்க வேண்டும். ஆனால், இதற்கான வெற்றி கிடைக்கும் போது அரசியல் கட்சிகள் உள்ளிட்ட வேறு எவரும் அதில் பங்கெடுக்க முடியாது.

ஒவ்வொரு கிராமத்திற்கும் திட்டமிடல் இருக்க வேண்டும், தேவைப்பாடுகள் இருக்கும், தனித்துவமான பிரச்சினைகள் இருக்கும், முன்னுரிமைகள் இருக்கும் இவற்றை நாம் அடையாளம் கண்டு வகுத்து முன்னோக்கி பயணிக்க வேண்டும். முஸ்லிம் லீக்குக்கு வரும் போது தத்தமது அரசியல் கட்சிகள், இஸ்லாமிய இயக்கங்கள் உட்பட வேறு சிந்தனை போக்குகளை விடுத்து, நாம் அனைவரும் முஸ்லிம்கள் என்ற பொதுவான அடையாளத்துடன் வர வேண்டும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

முஸ்லிம் லீக்கின் முதலாவது மகளிர் பிரிவை களுத்தறையிலிருந்து ஆரம்பிப்போம்.

நாங்கள் 1968 ஆம் ஆண்டு இந்த அமைப்பை ஆரம்பிக்கின்ற பொழுது மக்கள் விடுதலை முன்னணி உடைய அச்சுறுத்தல் காணப்பட்டது. அது குறித்து பிரஸ்தாபித்தோம். இன்று இளைஞர்கள் மத்தியில் குடிகொண்டுள்ள அச்ச உணர்வு குறித்து பிரஸ்தாபிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.இது ஜனநாயக நாடு.இது ஏகாதிபத்திய நாடு அல்ல.எனவே ஜனநாயக நாட்டில் சகலரும் சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்கின்ற தோற்றபாட்டை நாம் ஏற்படுத்த வேண்டும்.ஏனையவர்களைப் போல் நாமும் நாட்டுக்கு பங்களிக்க முடியுமானவர்கள் என்பதை கான்பிக்க வேண்டும். எமது தனித்துவத்தை பாதுகாத்துக் கொண்டு எம்மால் இந்நாட்டுக்காக பனியாற்ற முடியும்.

நாம் இந் நாட்டுக்கு நாங்கள் பாரமானவர்கள் அல்லர். இந்நாட்டில் வாழ்வதற்கான சகல உரிமைகளையும் கொண்டவர்கள்.அதேபோன்று இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு முன்மாதிரியான ஒரு சமூகமாக நாங்கள் காட்சி அளிக்க வேண்டும். அதற்கான அடித்தளத்தை இட வேண்டும். அதனை ஏனைய சமூகங்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாங்கள் செயல்படுத்த வேண்டும்.

இலங்கையின் சுதந்திரத்தோடு மலை நாட்டு மக்களது காணிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றிற்கு எதிராக போராடினார்கள். எனவே வெள்ளையர்கள் அவர்களுடைய காணிகளை ஆதிக்கம் செலுத்தி வைத்திருந்தார்கள். அந்த வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரத்திற்கு பின்னர் காணிகளை விடுவிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கமிஷன்கள் உருவாக்கப்பட்டன.

இது இவர்களுக்கு மட்டும் இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகள் அல்ல. முஸ்லிம்களுடைய காணிகளும் சில போதும் கையகப்படுத்தப்பட்டதையும் வரலாறுகள் கூறிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கையில் கத்தோலிக்க பாடசாலைகளில் கல்வி உயர்நிலையில் காணப்பட்டன. அப்பாடசாலையில் கற்றவர்கள் பல்வேறு உயர் பதவிகள் பெற்றுச் சென்றனர்.

அதனை அவதானித்த சிங்கள தலைவர்கள் தங்களுடைய சமூகம் சார்ந்தவர்களும் அப்படியான பதவிகளுக்கு செல்ல வேண்டும் என்பதற்காக சிங்கள பாடசாலைகளை ஆரம்பித்தார்கள்.இதில் ராகுல,ஆனந்த,நாலந்த போன்ற பாடசாலைகளை உதாரணங்களாக கூறலாம்.இதனை அவதானித்த டீ பி ஜாயா உட்பட முஸ்லிம் தலைவர்களும் அப்போதைய நிலையில் முஸ்லிம் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து முஸ்லிம் பாடசாலைகளை உருவாக்கினார்கள். அந்த வகையிலேயே நாடு தழுவிய முறையில் சாஹிரா கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் தரமான கல்விகள் வழங்கப்பட்டன.புதிய கற்பிதங்கள் வழங்கப்பட்டன. நவீன கல்வி போதிக்கப்பட்டன.

அந்த கல்விகள் தங்களுடைய அடையாளத்தை இல்லாமல் ஆக்காத நிலையில் நடத்தி வரப்பட்டதை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். எமது தனித்துவம் விட்டுச் செல்லாமல் இருப்பதே இதன் நோக்கமாக அமைந்திருந்தது.அவ்வாறு உருவாக்கப்பட்ட பாடசாலைகள் இன்றும் தரமான கல்விகளை வழங்கி வருவதை நாம் காணுகிறோம்.

முஸ்லிம் சமூகத்தில் யுகத்திற்கு ஏற்ற விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும்.அப்போதே எமது இருப்பு நிலைபெறும்.காலத்திற்கேற்ற புதிய தலைமுறைகள் இதிலிருந்தே தோற்றம் பெறும். எனவே முஸ்லிம் இளைஞர்கள் தமது அச்ச உணர்வுகளை விடுத்து இந்நாட்டில் ஜனநாயகப் பிரவேசங்களுக்கு நுழைய வேண்டும்.

முஸ்லிம் லீக் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட ஓர் அமைப்பு.இந்த முஸ்லிம் லீக்கை இந்நாட்டு இளைஞர் யுவதிகள் நன்கு பயன்படுத்துங்கள்.இந்நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட டீ.பி ஜாயா போன்றவர்கள் இதனை ஆரம்பித்தனர்.இதில் பதியுதீன் மஹ்மூத் போன்ற பலர்,பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சமூகத்திற்காக இதில் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

முஸ்லிம் லீக் இந்நாட்டு முஸ்லிம்களுக்குரிய ஜனநாயக கட்டமைப்பு.எமது தனித்துவத்தோடு,அதே போன்று காலத்திற்கேற்ற புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து அச்சமின்றி சமூக இயக்கவியலை நெறிப்படுத்த இதில் இணைந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்குமாறும் அழைப்பு